# சோதிடமலர்

## SOTHIDA MALAR




### உள்ளே..........

- இம்மாதம் உங்களுக்கு எப்படி?
- இம்மாத வானியற் காட்சிகள்
- மரணத்தை அறியும் முறைகள்
- நவக்கிரக வழிபாடு
- சோதிடம் கற்போம்
- அதிஷ்ட எண் ஞானம்
- குறுக்கெழுத்துப் போட்டி

இன்னும் பல.

* * *


குரோதன ௵ வைகாசி ௴

(14-5-85—14-6-85)

விலை ரூபா: 3-00




★ அமோக விற்பனையாகும் சோதிட சஞ்சிகை ★

குக்குட த்வஜ ஹஸ்த நமோ நமோ
சக்திசூல வராங்க நமோ நமோ
புஷ்பசோபித காத்ர நமோ நமோ - தாரித்ரியநாச

மல்லி காமரு மால நமோ நமோ
பத்ம ராக விசோபிந் நமோ நமோ
வைர கங்கண தாரிந் நமோ நமோ - திருத்தணிஸ்வர

## நல்வாக்கு

* உறவினரிடம் கருணை, ஏவலாளரிடம் தாட்சண்யம், துஷ்டரிடம் வெறுப்பு, நல்லோரிடம் அன்பு, பெரியோரிடம் பொறுமை, பணிவு இவை வாழ்க்கைக்கு அவசியமாகும்.

* கைக்கு அழகு கொடையும், தலைக்கு அழகு பெரியோரைப் பணிதலும், வாய்க்கு அழகு உண்மையும், மனதுக்கு அழகு ஒழுக்கமும், செவிக்கு அழகு நல்லன கேட்டலுமாகும்.

* சூரியன் தாமரையும், சந்திரன் ஆம்பலையும், மேகம் பூமியில் பயிர் வகைகளையும் மலரச் செய்வதுபோல் நல்லவர்கள் பிறரை வாழச் செய்கின்றனர்.

* கஷ்ட காலத்தில் தைரியமும், மேன்மை பெறும்போது பொறுமையும், சபையில் பேச்சு வன்மையும், போரில் வீரமும், கல்வியில் ஊக்கமும் வாழ்வில் வேண்டுவன.

## அம்பிகை அருள்

அன்புதான் அழகு. காருண்யமே அழகு. அன்பும், காருண்யமுமுடைய அம்பாளின் அருளைப் பெற்றால் அதன் அழகு மறையாமல் நிற்கிறது. இவ்வழகு ஒரு குழந்தையின் அழகாகத் தெரிகிறது. தாயாரின் முன்பே எமது ஆசை, காமம் நீங்கி நாம் குழந்தை என்னும் எண்ணம் மேலோங்குவதனாலேயே தெய்வத்தை அம்பாளாகப் பாவிக்கின்றோம். அத்துடன் நாமெல்லோரும் சகோதரர் எனும் திடமான எண்ணமும் தாயாரின் முன்னாலேயே உண்டாகிறது. எண்ணமிதுவே நடைமுறையில் தோன்றும் கஷ்டங்கள் தீரச் சிறந்த வழியாகிறது. உருவமில்லாத இறைவனை உருவத்துடன் காணவேண்டுமெனில் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத அழகிய ஓர் முகம் வேண்டும். எல்லோருக்கும் நல்லதையே செய்ய வேண்டும் என்னும் எண்ணம் எல்லோருக்கும் தாயாக இருக்கும் அம்பிகையின் கருணையே சிறந்த அழகான அலங்காரமாக எமக்குக் கிடைக்க வேண்டும்.

உ

# சோதிடமலர்

SOTHIDA MALAR

ஆசிரியர்:
பிரம்மஸ்ரீ கி. சதாசிவ சர்மா
(சம்ஸ்கிருத பண்டிதர்)

❋

குரோதன ஸூ வைகாசி மீ
( 14 - 5 - 85 )

மலர் 8 | இதழ் 2

உள்ளே........................

| | | பக்கம் |
|---|---|---|
| 1 | நாள் எப்படி? ... | 2 |
| 2 | உதயலக்கினம் காணும் பதகம் ... | 4 |
| 3 | வைகாசி மாதக் கிரகநிலை ... | 5 |
| 4 | கால ஹோரைகள் ... | 6 |
| 5 | வைகாசி மாத வானியற் காட்சி ... | 7 |
| 6 | சோதிடம் கற்போம் ... | 8 |
| 7 | இம்மாதம் உங்களுக்கு எப்படி? ... | 9 |
| 8 | மரணத்தை அறியும் முறைகள் ... | 10 |
| 9 | நவக்கிரக வழிபாடு ... | 19 |
| 10 | அதிஷ்ட எண்ஞானம் ... | 21 |
| 11 | ஆய்வு மன்றம் ... | 23 |
| 12 | குறுக்கெழுத்துப் போட்டி ... | 24 |
| 13 | வாசகர் எண்ணம் ... | 25 |

# நாள் எப்படி?

வை 1 செவ் (14-5-85) தசமி பகல் 2-54 வரை, பூரட்டாதி - மரணம் இரவு 9-51 வரை, அசுப தினம். ராகு 2-53 — 4-23

வை 2 புத (15-5-85) ஏகாதசி மாலை 5-16 வரை, உத்தாட்டாதி - சித்தம் இரவு 12-49வ. ஸப்த ஏகா தசி விரதம். முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 11-53 — 1-23

வை 3 வியா (16-5-85) துவாதசி மாலை 7-49 வ. ரேவதி பி.இ. 3-58 வரை, சித்தாமிர்தம், சுபகரு மங்களுக்கு நன்று. ராகு 1-23 — 2-53

வை 4 வெ (17-5-85) திரயோதசி இரவு 10-26 வ. அசுவினி முழுவதும், அமிர்தம், பிரதோஷ விரதம் சுபகருமங்கள் செய்யலாம். ராகு 10-23 — 11-53

வை 5 சனி (18-5-85) சதுர்த்தசி இரவு 12-56வரை அசுவினி காலை 7-06 வரை. சித்தம் சுபகருமங் கட்கு நன்றல்ல. ராகு 8-53 — 10-23

வை 6 ஞா (19-5-85) அமாவாசை பி.இ. 3-12வ. பரணி-மரணம் காலை 10-05 வரை, அமாவாசை, கார்த்திகை விரதம், அசுப தினம். ராகு 4-23 — 5-53

வை 7 திங் (20-5-85) பிரதமை பி. இ. 5-08 வரை, கார்த்திகை - மரணம் பகல் 12-48 வரை, கரிநாள் முக்கிய கருமங்களை பகல் 12-48ன் மேல் செய்க. ராகு 7-22 — 8-52

வை 8 செவ் (21-5-85) துவிதியை முழுவதும், ரோகிணி பகல் 3-12 வரை, அமிர்தசித்தம், சந் திர தரிசனம், வயல், தோட்டச் செய்கைகள் செய்யலாம். ராகு 2-52 — 4-22

வை 9 புத (22-5-85) துவிதியை காலை 6-41 வரை, மிருகசீரிடம் மாலை 5-12 வரை, சித்தம், சுபகரு மங்கட்கு நன்று. ராகு 11-52 — 1-22

வை 10 வியா (23-5-85) திரிதியை கா.7-48 வரை, திருவாதிரை-மரணம் மாலை 6-44 வரை, சதுர்த்தி விரதம். சுபதினமன்று. ராகு 1-22 — 2-52

வை 11 வெ (24-5-85) சதுர்த்தி காலை8-26 வரை, புனர்பூசம் - சித்தம் மாலை 7-47 வரை, முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 10-22—11-52

வை 12 சனி (25-5-85) பஞ்சமி காலை 8-32 வரை, பூசம் - சித்தம் மாலை 8-21 வரை, ஷஷ்டி விரதம், சுபகருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 8-52 — 10-22

வை 13 ஞா (26-5-85) ஷஷ்டி கா. 8-06 வ. ஆயிலி யம் இரவு 8-22 வரை, மரணம். அசுபதினம். ராகு 4-22 — 5-52

வை 14 திங் (27-5-85) ஸப்தமி காலை 7-08 வரை, அஷ்டமி பி.இ. 5-37 வரை. மகம் - மரணம் மாலை 7-51 வரை, சுபதினமன்று. ராகு 7-22—8 52

வை 15 செவ் (28-5-85) நவமி பி. இ. 3-36 வரை, பூரம் மாலை 6-43 வரை, சித்தாமிர்தம், அக்கினி நாள் முடிபு. அசுபதினம். ராகு 2-52—4-22

வை 16 புத (29-5-85) தசமி பி. இ. 1-09 வரை, உத்தரம் மாலை 5-18 வரை, அமிர்தசித்தம், கரி நாள். சுபதினமன்று. ராகு 11-52 — 1-22

வை 17 வியா (30-5-85) ஏகாதசி இரவு 10-18 வ. அத்தம்-சித்தம் பகல் 4-23 வரை, கரிநாள், ஸர்வ ஏகாதசி விரதம், அசுபதினம். ராகு 1-22—2-52

வை 18 வெள் (31-5-85) துவாதசி மாலை 7-11வ. சித்திரை பகல் 1-08 வரை, சித்தம், சுபகருமங் களுக்கு நன்று. ராகு 10-22 — 11-52

வை 19 சனி (1-6-85) திரயோதசி பகல் 3-54 வ. சுவாதி பகல் 10-42 வரை, சனிப்பிரதோஷ விரதம், வைகாசி விசாகம், முக்கிய கருமங்கள் செய்யலாம். ராகு 8-52 — 10-22

வை 20 ஞா (2-6-85) சதுர்த்தசி பகல் 12-34 வ. விசாகம் காலை 8-12 வரை, அனுஷம் பி. இ. 5-46 வரை, மரணம். பூரணை விரதம், சுபநாட்களுக்கு விலக்குக. ராகு 4-22—5-52

வை 21 திங் (3-6-85) பூரணை காலை 9-21 வரை, கேட்டை பி.இ. 3-34 வரை, சித்தம். அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 7-22—8-52

வை 22 செவ் (4-6-85) பிரதமை காலை 6-24 வரை. துவிதியை பி.இ. 3-49 வரை. மூலம் பி. இ. 1-45 வரை, அமிர்தசித்தம், அசுபதினம். ராகு 2-52 — 4-22

வை 23 புத (5-6-85) திரிதியை பி. இ. 1-49 வ. பூராடம் இரவு 12-28 வரை, அமிர்தம், சுபதின மல்ல. ராகு 11-52 — 1-22

வை 24 வியா (6-6-85) சதுர்த்தி இரவு 12-28 வ, உத்தராடம் இரவு 11-50 வரை, சித்தம், அவசிய கருமங்களைச் செய்யலாம். ராகு 1-22—2-52

வை 25 வெ (7-6-85) பஞ்சமி இரவு 11-52வரை, திருவோணம் - மரணம் இரவு 11-28 வரை, அசுப தினம். ராகு 10-22 — 11-52

வை 26 சனி (8-6-85) ஷஷ்டி இரவு 12-05 வரை, அவிட்டம் - சித்தம் இரவு 12-53 வரை, முக்கிய கருமங்கள் மேற்கொள்ளலாம்.
ராகு 8-52 — 10-22

வை 27 ஞா (9-6-85) ஸப்தமி இரவு 1-04 வரை, சதயம் பி. இ. 2-33 வரை, சித்தம். அவசிய கருமங்கள் செய்யலாம். ராகு 4-23 — 5-53

வை 28 திங் (10-6-85) அஷ்டமி பி.இ. 3-44 வரை, பூரட்டாதி - மரணம் பி.இ. 4-52 வரை, அசுப தினம். ராகு 7-23 — 8-53

வை 29 செவ (11-6-85) நவமி பி. இ. 4-56 வரை, உத்தரட்டாதி முழுவதும், அமிர்தம், சுபதின மன்று. ராகு 2-53 — 4-23

வை 30 புத (12-6-85) தசமி முழுவதும், உத்தரட்டாதி-சித்தம் கா. 7-41 வரை, சுபகருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 11-53 — 1-23

வை 31 வியா (13-6-85) தசமி காலை 7-26 வரை, ரேவதி பகல் 10-46 வரை, சித்தாமிர்தம், சுபகருமங்கள் செய்யலாம். ராகு 1-23—2-53

வை 32 வெள் (14-6-85) ஏகாதசி பகல் 10-00வ, அசுவினி பகல் 1-54 வரை, அமிர்தசித்தம், ஸர்வ ஏகாதசிவிரதம், பகல் 1-54க்குள் அவசிய கருமங்கள் மேற்கொள்ளலாம். ராகு 10-23 – 11-53

## இம்மாத விசேடம்

# விசாகப் பெருநாள்

சூரபன்மனின் கொடுமைகளைத் தாங்க முடியாத தேவர்கள் இறைவனிடம் சென்று தமது குறைகளை முறையிட்டு இத்துன்பங்களைத் தீர்க்கும் வண்ணம், ''வேதமுங் கடந்து நின்ற விமல! ஓர் குமரன் தன்னை நீ தரல் வேண்டும். நின்பால் நின்னையே நிகர்க்க'' என்று வேண்டிக் கொண்டனர். கருணைக் கடலான சிவபிரான் தேவர்களைக் காக்கும்படியாக தமது நெற்றிக் கண்ணினின்றும் ஆறு தீப்பொறிகளை தோற்றுவித்து சரவணத் தடாகத்தில் விடப்பட்டபோது ஆறு குழந்தைகளாக உருவெடுத்தன. மகாவிஷ்ணு கார்த்திகைப் பெண்கள் மூலம் அக்குழந்தைகளை பாலூட்டுவித்து வளர்த்து ஒன்று சேர்த்தபோது ஆறு முகங்களையுடைய ஒரு திருமுருகன் அவதரித்தார். இவ்வாறு பொறிகளும் கங்கையில் சேர்ந்து உருவமான தினம் வைகாசி மாத விசாகநட்சத்திரத் தினமாகும்.

ஐம்பூதங்களும் உயிருமாகிய ஆறினையும் திருமுகங்களாக உருவகித்து எங்கும் நிறைந்த கடவுட்தன்மையை உலகுக்கு உணர்த்துவது இறைவனின் அருட்செயலாகும்.

''ஈசனே யவனுடலால் மதலையாயினன் காண்
பேசிலாங்கவன் பரனெடு பேதகனல்லன்''

எனும் கந்தபுராணச் செய்யுளும் உலகத்துயிர்கள் யாவும் உய்வடையும் பொருட்டு இறைவனே தமது திருவிளையாடலால் குழந்தையாயினன் என்பதை வலியுறுத்துகின்றது.

அத்துடன் வைஷ்ணவ சமயத்தில் நம்மாழ்வார் அவதரித்ததும், புத்தபகவான் அவதாரமும், அருள் நிர்வாணம் பெற்றதுமாய செய்திகளும் இத்தினத்திற்கு மேலும் சிறப்பைத் தருகின்றன.

# அபிஷேகப் பலன்கள்

இறைவனுக்கு அபிஷேகிக்கப்படும் திரவியங்கள் ஒவ்வொன்றுக்கும் சிறந்த பலன்களுண்டு,

சந்தனாதிதைலம் — சுகத்தையும்
அரிசிமா — மலநாசத்தையும்
நெல்லிமா — ரோகநாசத்தையும்
மஞ்சல்மா — ராஜவசியத்தையும்
பஞ்சகவ்யம் — ஆன்மசுத்தியையும்
பஞ்சாமிர்தம் — வெற்றி, - செல்வத்தையும்
பால் — ஆயுள் வளர்ச்சியையும்
தயிர் — பிரஜா (மக்கள்) விருத்தியையும்
நெய் — சங்கீதவன்மையையும்
கருப்பஞ்சாறு — நித்தியஷேமத்தையும்
சர்க்கரை — சத்துரு வசியத்தையும்
தோடம்பழம் — பூமிலாபத்தையும்
எலுமிச்சம்பழம் — மரணபயமின்மையையும்
அன்னம் — அரசுரிமையையும்
இளநீர் — புத்திரப்பேற்றையும்
சந்தனம் — சாயுச்சிய பதவியையும்
மங்களத்தையும் கொடுக்கின்றன.

— தொகுப்பு: ''ஹேமா''

## உதயலக்னம் காணும் பதகம் (யாழ்ப்பாணம்)

### குரோதன ஸ்ரீ வைகாசி மீ 1-ந் தேதி முதல் 32-ந் தேதி வரை. (14-5-85 முதல் 14-6-85 வரை)

| இங் | தமி | வாரம் | இடபம் | | மிதுன | கடகம் | சிங்கம் | கன்னி | துலா | விருச்சி | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் | மேடம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மே | வை | | ம.மி. முதல் (காலை) | ம.மி. வரை (காலை) | ம. மி. வரை (காலை) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பகல்) | ம. மி. வரை (பி.ப) | மி. ம. வரை (மாலை) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (இரவு) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை (பி.இ) | ம. மி. வரை) (பி.இ) |
| 14 | 1 | செவ் | 5 53 | 7 57 | 10 9 | 12 16 | 2 17 | 4 16 | 6 20 | 8 30 | 10 38 | 12 34 | 2 19 | 4 1 | 5 51 |
| 15 | 2 | புதன் | 5 51 | 7 54 | 10 6 | 12 13 | 2 14 | 4 13 | 6 17 | 8 27 | 10 35 | 12 31 | 2 16 | 3 58 | 5 48 |
| 16 | 3 | வியா | 5 48 | 7 50 | 10 2 | 12 9 | 2 10 | 4 9 | 6 13 | 8 23 | 10 31 | 12 27 | 2 12 | 3 54 | 5 44 |
| 17 | 4 | வெள் | 5 44 | 7 46 | 9 58 | 12 5 | 2 6 | 4 5 | 6 9 | 8 19 | 10 27 | 12 23 | 2 8 | 3 50 | 5 40 |
| 18 | 5 | சனி | 5 40 | 7 42 | 9 54 | 12 1 | 2 2 | 4 1 | 6 5 | 8 15 | 10 23 | 12 19 | 2 4 | 3 46 | 5 36 |
| 19 | 6 | ஞாயி | 5 36 | 7 38 | 9 50 | 11 57 | 1 58 | 3 57 | 6 1 | 8 11 | 10 19 | 12 15 | 2 0 | 3 42 | 5 32 |
| 20 | 7 | திங் | 5 32 | 7 34 | 9 46 | 11 53 | 1 54 | 3 53 | 5 57 | 8 7 | 10 15 | 12 11 | 1 56 | 3 38 | 5 28 |
| 21 | 8 | செவ் | 5 28 | 7 30 | 9 42 | 11 49 | 1 50 | 3 49 | 5 53 | 8 3 | 10 11 | 12 07 | 1 52 | 3 34 | 5 24 |
| 22 | 9 | புதன் | 5 24 | 7 26 | 9 38 | 11 45 | 1 46 | 3 45 | 5 49 | 7 59 | 10 7 | 12 03 | 1 48 | 3 30 | 5 20 |
| 23 | 10 | வியா | 5 20 | 7 22 | 9 34 | 11 41 | 1 42 | 3 41 | 5 45 | 7 55 | 10 3 | 11 59 | 1 44 | 3 26 | 5 16 |
| 24 | 11 | வெள் | 5 16 | 7 18 | 9 30 | 11 37 | 1 38 | 3 37 | 5 41 | 7 51 | 9 59 | 11 55 | 1 40 | 3 22 | 5 12 |
| 25 | 12 | சனி | 5 12 | 7 14 | 9 26 | 11 33 | 1 34 | 3 33 | 5 37 | 7 47 | 9 55 | 11 51 | 1 36 | 3 18 | 5 8 |
| 26 | 13 | ஞாயி | 5 8 | 7 10 | 9 22 | 11 29 | 1 30 | 3 29 | 5 33 | 7 43 | 9 51 | 11 47 | 1 32 | 3 14 | 5 4 |
| 27 | 14 | திங் | 5 4 | 7 6 | 9 18 | 11 25 | 1 26 | 3 25 | 5 29 | 7 39 | 9 47 | 11 43 | 1 28 | 3 10 | 5 0 |
| 28 | 15 | செவ் | 5 0 | 7 2 | 9 14 | 11 21 | 1 22 | 3 21 | 5 25 | 7 35 | 9 43 | 11 39 | 1 24 | 3 6 | 4 56 |
| 29 | 16 | புதன் | 4 56 | 6 58 | 9 10 | 11 17 | 1 18 | 3 17 | 5 21 | 7 31 | 9 39 | 11 35 | 1 20 | 3 2 | 4 52 |
| 30 | 17 | வியா | 4 52 | 6 54 | 9 6 | 11 13 | 1 14 | 3 13 | 5 17 | 7 27 | 9 35 | 11 31 | 1 16 | 2 58 | 4 48 |
| 31 | 18 | வெள் | 4 48 | 6 50 | 9 2 | 11 9 | 1 10 | 3 9 | 5 13 | 7 23 | 9 31 | 11 27 | 1 12 | 2 54 | 4 44 |
| ஜூன் 1 | 19 | சனி | 4 44 | 6 46 | 8 58 | 11 5 | 1 6 | 3 5 | 5 9 | 7 19 | 9 27 | 11 23 | 1 8 | 2 50 | 4 40 |
| 2 | 20 | ஞாயி | 4 40 | 6 42 | 8 54 | 11 1 | 1 2 | 3 1 | 5 5 | 7 15 | 9 23 | 11 19 | 1 4 | 2 46 | 4 36 |
| 3 | 21 | திங் | 4 36 | 6 38 | 8 50 | 10 57 | 12 58 | 2 57 | 5 1 | 7 11 | 9 19 | 11 15 | 1 0 | 2 42 | 4 32 |
| 4 | 22 | செவ் | 4 32 | 6 34 | 8 46 | 10 53 | 12 54 | 2 53 | 4 47 | 7 7 | 9 15 | 11 11 | 12 56 | 2 38 | 4 28 |
| 5 | 23 | புதன் | 4 28 | 6 30 | 8 42 | 10 49 | 12 50 | 2 49 | 4 43 | 7 3 | 9 11 | 11 7 | 12 52 | 2 34 | 4 24 |
| 6 | 24 | வியா | 4 24 | 6 26 | 8 38 | 10 45 | 12 46 | 2 45 | 4 39 | 6 59 | 9 7 | 11 3 | 12 48 | 2 30 | 4 20 |
| 7 | 25 | வெள் | 4 20 | 6 22 | 8 34 | 10 41 | 12 42 | 2 41 | 4 36 | 6 55 | 9 3 | 10 59 | 12 44 | 2 26 | 4 16 |
| 8 | 26 | சனி | 4 16 | 6 18 | 8 30 | 10 37 | 12 38 | 2 37 | 4 32 | 6 51 | 8 59 | 10 55 | 12 40 | 2 22 | 4 12 |
| 9 | 27 | ஞாயி | 4 12 | 6 14 | 8 26 | 10 33 | 12 34 | 2 33 | 4 28 | 6 47 | 8 55 | 10 51 | 12 36 | 2 18 | 4 8 |
| 10 | 28 | திங் | 4 8 | 6 10 | 8 22 | 10 29 | 12 30 | 2 29 | 4 24 | 6 43 | 8 51 | 10 47 | 12 32 | 2 14 | 4 4 |
| 11 | 29 | செவ் | 4 4 | 6 6 | 8 18 | 10 25 | 12 26 | 2 25 | 4 20 | 6 39 | 8 47 | 10 43 | 12 28 | 2 10 | 4 0 |
| 12 | 30 | புதன் | 4 0 | 6 2 | 8 14 | 10 21 | 12 22 | 2 21 | 4 16 | 6 35 | 8 43 | 10 39 | 12 24 | 2 6 | 3 56 |
| 13 | 31 | வியா | 3 56 | 5 58 | 8 10 | 10 17 | 12 18 | 2 17 | 4 12 | 6 31 | 8 39 | 10 35 | 12 20 | 2 2 | 3 52 |
| 14 | 32 | வெள் | 3 52 | 5 54 | 8 6 | 10 13 | 12 14 | 2 13 | 4 8 | 6 27 | 8 35 | 10 31 | 12 16 | 2 58 | 3 48 |

*இப்பதகத்தின் உதவியுடன் ஒரு குழந்தை ஜனனமான நேரத்துக்குரிய இலக்கினத்தை இலகுவில் அறிந்து கொள்ளலாம்.

உ-ம்! வைகாசி 32 உ (13-6-85) காலை 9-00 மணிக்கு என்ன லக்னம்? தடித்த எழுத்திலுள்ளதை கவனிக்க. (8-06—10-13) கடகலக்னம்

# வைகாசி மாதக் கிரகநிலை

| மீனம் | மேடம் | இடபம் | மிதுனம் |
|---|---|---|---|
| சுக் | புத ராகு | சூ குஜ | |
| கும்பம் | வைகாசி மாதக் கிரக நிலை | | கடகம் |
| மகரம்: குரு | | | சிம்மம் |
| நெப் | சனி யூரே | கேது | |
| தனுசு | விருச்சிகம் | துலாம் | கன்னி |

## கிரக மாற்றங்கள்

14உ (27-5-85) இரவு 10-03க்கு இட-புத
17உ (30-5-85) காலை 7-24க்கு மேட-சுக்
17உ (30-5-85) பி. இ. 4-39க்கு மிது-குஜ
18உ (31-5-85) பி. இ. 2-37க்கு துலா-சனி
28உ (10-6-85) இரவு 11-00க்கு மிது-புத
12உ குஜன் அஸ்தமனம்.
14உ புதன் அஸ்தமனம்.
23உ குரு வக்ராரம்பம்.

சனி, யுரேனஸ், நெப்டியூன் இம் மாதம் வக்ரத்திலேயே சஞ்சரிக்கின்றன.

## சந்திரனது இராசிநிலை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வை | 1உ | (14-5-85) | பகல் | 3-08 | முதல் | மீனம் |
| | 3உ | (16-5-85) | பி. இ. | 3-57 | ,, | மேடம் |
| | 6உ | (19-5-85) | காலை | 4-47 | ,, | இடபம் |
| | 8உ | (21-5-85) | பி. இ. | 4-15 | ,, | மிதுனம் |
| | 11உ | (24-5-85) | பகல் | 1-35 | ,, | கடகம் |
| | 13உ | (26-5-85) | இரவு | 8-21 | ,, | சிங்கம் |
| | 15உ | (28-5-85) | பி. இ. | 12-28 | ,, | கன்னி |
| | 17உ | (30-5-85) | பி. இ. | 2-17 | ,, | துலாம் |
| | 19உ | (1-6-85) | பி. இ. | 2-49 | ,, | விருச்சிகம் |
| | 21உ | (3-6-85) | பி. இ. | 3-33 | ,, | தனுசு |
| | 24உ | (6-6-85) | காலை | 6-14 | ,, | மகரம் |
| | 26உ | (8-6-85) | பகல் | 12-23 | ,, | கும்பம் |
| | 28உ | (10-6-85) | இரவு | 10-14 | ,, | மீனம் |
| | 31உ | (13-6-85) | காலை | 10-46 | ,, | மேடம் |

**கிரகநிலை குறிக்க:-**

* 4-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள பதகத்தின்படி வைகாசி மீ 30உ காலை 9-00 மணிக்கு கடக லக்னம் என அறிந்து கொண்ட பின் கடகம் என்ற கூட்டில் 'ல' என்று குறித்துக் கொள்ளவும். கிரகநிலையை அனுசரித்து மாற்றமடைந்த கிரகங்களையும் கவனித்து கிரக நிலை குறிக்கவும். லக்னம் முதல் வலமாக 1முதல் 12 வரை இலக்கமிடுக,

**மாதபலன்**

இம்மாதம் துலாலக்கினத்தில் பிறக்கின்றது. இலக்கினாதிபன் 6-லும், சூரியன் 8-லும் சஞ்சரிப்பதாலும், இலக்கினத்தில் கேது இருப்பதாலும் நாட்டில் நிம்மதியின்மை இருந்துகொண்டே இருக்கும். அரசாங்க தரப்பில் பெலவீனங்கள் தென்படும். தொற்று நோய்கள் பரவும். பொருளாதாரத்தில் பாதிப்புகள் ஏற்படலாம்.

# நலந்தரும் கால ஹோரைகள்

சூரிய ஹோரை:- உத்தியோகம், வியாபாரம் செய்ய, அரசாங்கத்திடம் சலுகைபெற, பெரிய உத்தியோகத்தரைக் காண, அரசாங்க அலுவல்கள் தொடங்க, பிதா வர்க்கத்தாருடன் பேச்சுக்கள் நடத்த நலம்.

சந்திர ஹோரை:- ஸ்திரீகளைப்பற்றிப் பேசுவது, கேள்விகள் கேட்பது, கவர்ச்சியான பேச்சுக்களை ஆரம்பிக்க, மாதாவர்க்கத்தாருடன் பேச உசிதம்; தோம்பு சம்பந்தப்பட்ட நீண்டகால விஷயங்கள் இதில் செய்யக்கூடாது.

செவ்வாய் ஹோரை:- உள்ளக்கருத்துக்களை மறைமுகமாகவைப்பது நலம். பூமிச்செய்கைகள் (மண்ணைக் கிண்டுதல், கொத்துதல் போன்றன) செய்ய, போருக்குப்புறப்பட, ஓமம், அக்கினி சம்பந்தமான வேலை ஆரம்பிக்க, உடற்பயிற்சி முதலியனவற்றிற்கு நன்று.

புதன் ஹோரை:- வதந்திகள் அனுப்பவும், எழுத்து வேலைகளுக்கும், பரீக்ஷை எழுதவும், ஆராய்ச்சிகள் செய்யவும், வானொலித் தொடர்புகள் கொள்ளவும், புத்தகம் எழுதவும், வெளியிடவும் நன்று

குரு ஹோரை:- எல்லாவற்றிற்கும் நலம். பணக்காரர் தயவை நாடுவது, எல்லாச் சாமான்களையும் வாங்குவது, உத்தியோகங்கள், பணவிஷய விவரங்களைத் தொடங்க, ஆடை ஆபரணங்கள் சேர்க்க, காரியங்கள் தடையின்றி நடக்கக் கடன்களைப் பெறுவது, ஷராப் வியாபாரிகளுக்கும் விவசாய லாபங்களுக்கும் இந்த ஹோரை மிகவும் சிறந்தது. விருந்துக்கு நல்லதல்ல.

சுக்கிர ஹோரை:- சுபவேலைகள் நடத்த, பெண்களைப்பற்றிப்பேச, இன்பக்கேளிக்கைகள், விவாகப்பேச்சு, பெண்களுடன் உரையாடல், பொன்னுபரணங்கள், வாகனங்கள் கொள்வனவு செய்தல் இன்பக்கலைகள் தொடங்குதல், சோடனை வேலைகள் ஆரம்பித்தல் முதலியனவற்றிற்கு சிறந்தது.

சனி ஹோரை:- இவ்வோரை மிகக் கொடியது. இருந்தபோதிலும் நிலங்கள், அவை சம்பந்தப்பட்ட சொத்துக்களைப்பற்றி நடவடிக்கை எடுக்க, தோம்பு துறவுகளைப்பற்றிப் பேசவும் நல்லது.

## (வைகாசி மாதம் 1-ந் தேதி முதல் 32-ந் தேதி வரை)

(சூரிய உதயம் 5 மணி 53 நிமிஷம்)

| வாரம் | 5...53<br>6...53 | 6...53<br>7...53 | 7...53<br>8...53 | 8...53<br>9...53 | 9...53<br>10...53 | 10...53<br>11...53 | 11...53<br>12...53 | 12...53<br>1...53 | 1...53<br>2...53 | 2...53<br>3...53 | 3...53<br>4...53 | 4...53<br>5...53 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பகல் | | | | | | | | | | | | |
| ஞாயி | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| திங்க | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| செவ் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| புதன் | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |
| வியா | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| வெள் | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| சனி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| இரவு | | | | | | | | | | | | |
| ஞாயி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் |
| திங்க | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு |
| செவ் | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி |
| புதன் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி |
| வியா | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய |
| வெள் | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி |
| சனி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் | சூரிய | சுக்கி | புதன் | சந்தி | சனி | குரு | செவ் |

குறிப்பு:- நீங்கள் செய்யவேண்டிய கருமம் என்ன, எந்த ஹோரையில் செய்வது நலம் என்பதை மேலே உள்ள குறிப்புகளில் ஆராய்ந்து குறிப்பிட்ட ஹோரை வரும் நேரத்தைப் பதகத்தில் பார்த்த அந்தநேரத்தில் குறிப்பிட்ட கருமத்தைச் செய்யவும். நிச்சயம் அனுகூலமாகும்.

# வைகாசி மாத வானியற் காட்சிகள்
# Astronomical Phenomena

14-5-85 — 14-6-85

சூரியன்: 14-5-85 மாலை 6-00-ல் இடபராசிப் பிரவேசம்.
14-5-85 உதயம் காலை 5-53
அஸ்தமனம் மாலை 6-19
14-6-85 உதயம் காலை 5-53
அஸ்தமனம் மாலை 6-26

சந்திரன்: 20-5-85 அமாவாசை இரவு 3-12 A.M.
21-5-85 சந்திர தர்சனம்
28-5-85 பூர்வஅஷ்டமிஇரவு 5-37A.M.
3-6-85 பூரணை பகல் 9-21
11-6-85 அபரஅஷ்டமி இரவு 2-44A.M.

## கிரகங்கள்

புதன்: மாத ஆரம்பத்தில் சூரிய உதயம் முன்கீழ் வானத்தில் 24 பாகை உயரத்தில் தோற்றும் இக்கிரகம் நாளடைவில் அதன் உயரம் குறைந்துவந்து 27-5-85ல் கிழக்கில் அஸ்தமனமடைந்துவிடும். 27-5-85ல் இடப ராசியிலும், 10-6-85ல் மிதுனராசியிலும் பிரவேசிக்கிறது.

சுக்கிரன்: மாத ஆரம்பத்தில் கிழ்வானத்தில் சூரிய உதயம்முன் 41பாகை உயரத்தில் பிரகாசமாகத் தோற்றும் இக்கிரகம் மாதமுடிவில் சூரியனிலிருந்து கூடிய தூரம் பிரிந்து 46பாகை உயரத்திற் காணப்படும், 30-5-85ல் மேடராசியிற் பிரவேசிக்கிறது.

செவ்வாய்: மாத ஆரம்பத்தில் சூர்ய அஸ்தமனத்தின் பின் மேற்குவானில் 19பாகை உயரத்தில் காணப்படும். இக்கிரகம் 25-5-85ல் மேற்கில் அஸ்தமனமாகி விடும். 30-5-85ல் மிதுனராசியிற் பிரவேசிக்கிறது.

வியாழன்: மாசத் தொடக்கத்தில் சூரிய உதயம் முன் உச்சிக்கு மேற்கே 6பாகை சரிந்து காணப்படும் இக்கிரகம், மாதமுடிவில் 36° சரிந்துகாணப்படும், 6-6-85விருந்து வக்கிரகதியிற் சஞ்சரிக்கிறது. இம்மாசம் முழுவதும் மகரராசியில் திருவோணம் 4ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

சனி: மாத ஆரம்பத்தில் சூர்யாஸ்தமனத்தின் பின் கீழ்வானில் 3பாகை உயரத்திற் காணப்படுமிக்கிரகம் மாதமுடிவில் 30பாகை உயரத்தில் காணப்படும். வக்கிரகதியிற் சென்றுகொண்டிருக்கும் இக்கிரகம் 31-5-85ல் துலாராசியில் விசாகம் 3ம் பாதத்திற் பிரவேசிக்கிறது.

இந்திரன் (Uranus): வக்கிரகதியிற் சென்றுகொண்டிருக்கும் இக்கிரகம் இம்மாதம் முழுவதும் விருச்சிகராசியில் கேட்டை 2ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

வருணன் (Neptune) வக்கிரகதியிற் சென்றுகொண்டிருக்கும் இக்கிரகம் இம்மாதம் முழுவதும் தனுராசியில் மூலம் மூன்றும் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

குபேரன் (Pluto): வக்கிரகதியிற் சென்றுகொண்டிருக்கும் இக்கிரகம் துலாராசியில் 1ம் பாதத்திற் சஞ்சரிக்கிறது.

## சமாகமாதிகள்

16-5-85 விடியற்காலை 4½ மணியளவில் சந்திரனுக்கு வடக்கு சுக்கிரன் பாகை 3.

18-5-85 அதிகாலை சந்திரனுக்கு தெற்கு புதன் 1½ பாகை. உதயம் முன் பார்க்கவும்.

21-5-85 பிற்பகல் சந்திரனுக்குத் தெற்கு செவ்வாய் 2பாகை. சந்திரதர்சனத்துடன் கவனிக்கவும்.

2-6-85 பின்னிரவு (A.M.) 3½ மணியளவில் சந்திரனுக்கு வடக்கு சனி 3பாகை. உதயம் முன் அவதானிக்கவும்.

7-6-85 முன்னிரவு சந்திரனுக்கு வடக்கு வியாழன் 5பாகை. சந்திரன் உதயமான பின் அவதானிக்கவும்.

14-6-85 பிற்பகல் சந்திரனுக்கு தெற்கு சுக்கிரன் 2பாகை. அன்று உதயம்முன் அவதானிக்கவும்.

# "சோதிடம் கற்போம்"

ஞானி

(பங்குனி மாதத்தொடர்)

## நான்காம் பாவம்

பன்னிரு இராசிகளும் சரம், ஸ்திரம், உபயம் என மூன்று வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. சரம் - அசையுந்தன்மை உள்ளது. ஸ்திரம் - அசைவற்றதன்மை உபயம் - அசைதலும், அசையாமலும் கலந்த தன்மை.

சரஇராசிகள்: மேடம், கடகம், துலாம், மகரம்.
ஸ்திரராசிகள்: இடபம், சிங்கம், விருச்சிகம், கும்பம்.
உபயராசிகள்: மிதுனம், கன்னி, தனுசு, மீனம்.

சாதகங்களில் சதுரவடிவாக அமைக்கப்பட்டிருக்கும் இராசிச் சக்கரத்தில் நான்கு மூலைகளிலும் உள்ள சதுரங்கள் உபயராசிகள் எனவும், இவற்றையடுத்துள்ள இராசிகள் சரராசிகள் எனவும், இச்சரராசிகளுக்கு அடுத்துள்ள இராசிகள் ஸ்திரராசிகள் எனவும் மனதில் பதித்துக்கொள்க.

சரராசிகளிலொன்று உதயலக்கினமாக அமையின் அச்சாதகர் ஒரே இடத்தில் இருக்க விரும்பாதவராவர். ஸ்திரராசி லக்கினமாக அமையின் இடமாற்றத்தை விரும்பாதவராவர். உபயராசி லக்கினமாக அமையின் சிலகாலம் ஒரே இடத்தில் இருக்கும் விருப்பும், சிலகாலம் இடமாற்ற விருப்பும் பொருந்துபவராவர்.

இரண்டாம் பாவம் சரராசியிலமையின் அசைவுள்ள தனமும், உபயஇராசியாயின் இரு திறப்பட்ட தனமும் சாதகருக்குச் சித்திக்குமெனலாம்.

மூன்றும் வீடு சரராசியாக இருப்பின் அடிக்கடி பிரயாணஞ்செய்யும் சுபாவமும், ஸ்திரராசியாயின் ஒரே இடத்தில் நிலைத்திருக்கும் விருப்பும், உபயராசியாயின் இவ்விரு தன்மையும் காலத்துக்குக் காலம் மாறி மாறி அமையும்.


நான்காம் பாவத்துக்கும், சரராசித்தொடர்பிருப்பது இப்பாவத்தின் காரகமாகிய பூமி, வீடு, வாகனம் இவற்றின் மாற்றங்களுக்கு ஏதுவாகும். ஸ்திரராசியின் தொடர்பு இவற்றை நிலைக்கச் செய்யும். உபயராசித்தொடர்பினால் இவை வருவதும், போவதுமாக அமையும். இவ்வாறு இராசித்தொடர்பு எல்லாப் பாவங்களிலும், எல்லாக் கிரகங்களுடன் இயைவுபடுத்திப் பலன் அறிய வேண்டும்.

இலக்கினம் சரராசியாயின் பதினோராம் இராசியும், ஸ்திரராசியாயின் ஒன்பதாம் இராசியும், உபயராசியாயின் ஏழாம் இராசியும் பாதகஸ்தானங்களாகும். பாதகஸ்தானமும், அத்தானத்துக்கு அதிபதியாகவுள்ள கிரகமும் துர்ப்பலனுக்குரியவராவர். பாதகாதிபதி திரிகோணமேறின் தோஷசாந்தி உண்டு.

பாதகாதிபதி இருக்கின்ற அல்லது அவரால் பார்க்கப்படுகின்ற பாவத்தின் காரகங்கள் பழுதடையும். சந்திரன் பாதகஸ்தான தொடர்பு பெற்றால் மாதாவுக்கு தேசுகக்குறைவு முதலிய கஷ்டபலனுண்டாம். நான்காம் பாவம் பாதகஸ்தான தொடர்பு பெறுவதும் இதுபோன்ற கஷ்டபலனைக் கொடுக்கும். பாதகஸ்தான தொடர்பு பெற்ற கிரகங்களின் தசாபுத்தி காலங்களில் நிம்மதிக் குறைவு, மனப்பீடை போன்ற துர்ப்பலனைக் காட்டும்.

நான்காவது பாவம் புத்திக்கூர்மையைக் கொடுப்பதாதலின் இப்பாவம் பெலமடைந்தால் உயர்கல்வி, கல்வித்தேர்ச்சி முதலியன சிறப்படையும். எவ்விடயத்துக்கும் லக்னபாவம் பெலமடைய வேண்டுமென முன்பு கூறியுள்ளதையும் கவனத்திற் கொள்க. வாக்குச் சாதுர்யத்துக்கு 2-ம் பாவமும், கேள்வி ஞானத்துக்கு 3-ம் பாவமும், பொது அறிவுக்கு 4-ம் பாவமும பெலமடைவதுடன் வித்தைகாரனாகிய புதனும் பெலமடைந்தால் பூரண கல்வித்தேர்ச்சியைக் கொடுக்கும். இப்பாவங்களின் தொடர்பு பெற்ற கிரகங்கள் நீசம் முதலிய தோஷங்கள் பொருந்தினால் கல்வித் தேர்ச்சி குன்றும். இராகு கேதுவின் தொடர்பு பெறின் மறதிக் குணத்தால் முன்னேற்றம் தடைப்படும். ஆறு, எட்டுக்குடையோர் தொடர்பு நோய்களாலும், விபத்துக்களாலும் கல்விவளர்ச்சி குன்றும்.

வீடு, வாகனம், பூமி, நீர்ச்சுகம், கைகள், பால்பசு முதலியவற்றையும் நான்காம் பாவத்தைக் கொண்டு ஆராய்ந்தறியலாம். (தொடரும்)




**இ. கந்தையா, கரம்பன், ஊர்காவற்றுறை.**

**14-5-85 முதல் 14-6-85 வரை**

பின்வரும் இராசிப்பலன்கள் இம்மாதக் கிரகசாரத்தை யொட்டியே தாப்பட்டிருக்கின்றன. ஒரு சாதகரின் பலன்கள் அவரின் நட்சத்திர உடுதசா நிர்ணயத்தை ஒட்டியே ஏறக்குறைய முக்கால் பங்கு அமையும். கிரகசார பலன் கால் பங்கு வீதமே கிட்டத்தட்ட ஒரு வரைப் பாதிக்கும். இதை மனதில் வைத்து பின்வரும் பலன்களை வாசித்துப் பயன் பெறவும். இங்கு இராசி என்று குறிப்பிடுவது ஜனன காலத்தில் சந்திரன் இருந்த இராசியேயாகும்.



## மேடம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1-ம் கால்

மேடராசியில் பிறந்தவர்களுக்குச் சூரிய பகவான் இம்மாதம் 2-ல் லோகமூர்த்தியாகி பலம் குறைந்து சஞ்சாரம் செய்வது இவர்களது துர்ப் பாக்கியமே! மற்றும் பிரதான கிரகங்களான வியாழன், சனி, ராகு. கேதுவின் துர்க்கோசர சஞ்சாரமும் தொடருகின்றது கடந்த மாதங்களில் ஏற்பட்ட கஷ்ட நட்டங்களின் தொடர்ச்சி இம்மாதமும் இருக்கும். மனவேதனை தரும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்ந்தாலும் ஆச்சரியமில்லை: தேகசுகம். குடும்பசுகம் பாதிப்படையும். குடும்பத்தில் பற்பல பிரச்சனைகளும், எதிர்பாராத திடீர் நெருக்கடிகளும் ஏற்படும். தெய்வவழிபாடு சாந்தியளிக்கும்.

குடும்பத்தவர்களுக்கு திடீர் நெருக்கடிகளும் குடும்பச் சிக்கல்களும் அதிகரிக்கும். குடும்ப சுகவீனம் முதலியன கவலைதரும். குடும்ப உறவு பாதிப்படையும். புத்திரர் உதவி, வருமானம் என்பன குறைவுறும்.

வர்த்தகர்களுக்கு இம்மாதமும் புது முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது, வங்கி நிலைமைகள் கவலைகளைக் கொடுக்கும். கறுப்புச்சந்தை வியாபாரிகள் தண்டனைகளுக்குள்ளாக நேரிடும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகள் அதிகரிக்கும். சிலருக்குக் கஷ்டப்பிரதேச இடமாற்றங்கள்கூட இடம்பெறலாம். சிலருக்குப் பதவியிறக்கம் அல்லது பதவிநீக்கம் கூட இடம்பெறலாம்.

விவசாயிகளுக்கு பயிரழிவுகள் கவலைதரும். வருமானத்திலும் பார்க்கச் செலவுகள் அதிகரிக்கும். கூலியாட்களின் ஒத்துழைப்புக்குன்றி பயிர் பாதுகாப்புகளை உரிய நேரத்தில் செய்ய முடியாது.


தொழிலாளர்களுக்கு வேலையின்மை தொழில் இழப்புக்கள் சிரமந்தரும். தொழிற் பிணக்குகள்

அதிகரிக்கும். உழைப்புக்கேற்ற ஊதியம் கிட்டாது. ஒப்பந்த வேலைகள் நட்டம் தரும்.

மாணவர் கல்விக் குழப்பநிலை தொடரும். சுய முயற்சியுடையவர்கள் ஓரளவு தப்பிக்கொள்வார்கள். கல்வித் தேர்ச்சிகள் எண்ணம்போல் அமையாது.

பெண்களுக்கு மிகவும் சோதனையான காலம். குடும்பப் பெண்களுக்கு நாவடக்கம் குடும்பப் பிணக்குகளைத் தவிர்க்க உதவும். கன்னிப் பெண்களின் விவாக விஷயங்களில் முடிவெக்க முடியாத குழப்பநிலை தொடரும்.

அதிஷ்ட நாட்கள்: மே 14 17 18 19 22 23 24 26,
ஜூன் 4 5 6 8 9 10 13 14
துரதிஷ்ட நாட்கள்: மே 14 15 16 29 30,
ஜூன் 2 3 4 11 12 13




கார்த்திகை 2 3 4, ரோகிணி, மிருகசிரிடம் 1 2

இடபராசியில் பிறந்தவர்களுக்குக் சூரிய பகவான் 1-ல் சுவர்ணமூர்த்தியாகிச் சமபலத்துடன் இந்தமாதம் சஞ்சாரம் செய்கின்ருர். செவ்வாய், சனி, ராகு இவர்களின் சஞ்சாரம் பாதகமாக அமையினும் 9-ல் குருவும், 6-ல் கேதுவும் பெலம் பெறுவது நன்மையாகும். பணவருவாய் சுமாராக இருக்கும். அவசியச் செலவுகளும் அடிக்கடியேற்படும். அலைச்சல் மூலம் காரியசித்தி ஏற்படலாம். வாக்குவிரோதச் சம்பவங்கள், வீடுவாகனசேதம் என்பன சிலருக்கு ஏற்படலாம்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பத்தில் பிணி பீடைகள் ஏற்படும். குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் அவ்வப்போது தோன்றி மறையும். பெரியவர்களின் உதவிகள் சமயத்தில் கிட்டும். குடும்ப வருமானத்திலும் செலவுகள் அதிகரித்தலால் வாழ்க்கைத்தரம் குன்றும்.

வர்த்தகர்களுக்கு வங்கி நிதி நிலைமைகள் சீராக இருக்கும். எனினும் புதுமுதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. வியாபார மந்தநிலை ஏற்படும். சிற்றூழியரின் கெடுபிடிகளால் வியாபாரம் மந்தநிலையடையும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் பாராட்டுக் கிட்டும். சிலருக்கு பதவியுயர்ச்சியுடன் கூடிய வேலைப்பொறுப்பு அதிகரிக்கும்: கீழ் உத்தியோகத்தரின் ஒத்துழைப்புக் குன்றும்.

விவசாயிகளுக்கு இயற்கையழிவுகள் பயிர் உற்பத்திக் குறைவை ஏற்படுத்தும். மானியம் பசளை முதலியன கிடைப்பதில் தாமதமேற்படும். கூலியாட்களின் ஒத்துழைப்புக் கிட்டும்.

தொழிலாளருக்கு வேலைவாய்ப்புக் குன்றும். முதலாளி - தொழிலாளர் மத்தியில் கருத்து வேற்றுமைகள் அதிகரிக்கும். தொழில் பிணக்குகள் அடிக்கடி ஏற்படும். தொழில் ஒப்பந்தங்களை கூடியவரை தவிர்த்தல் நன்று.

மாணவர்களுக்கு கல்விக்குழப்பங்கள் ஏற்பட்டாலும் சுயமுயற்சியால் கல்வி முன்னேற்றம் ஏற்படும். ஆசிரியர் - மாணவர் உறவில் அபிவிருத்தி காணும். சந்தர்ப்ப சூழ்நிலைகள் பரீட்சைத்தடை, தேர்ச்சித்தடை என்பவற்றை ஏற்படுத்தும்.

பெண்களுக்கு காதல் விவகாரங்கள் சிரமங்களுக்கிடையில் நன்முடிவுகளைத் தரும். சிலருக்கு விவாகசித்தியும் ஏற்படலாம். குடும்பப்பெண்கள் குடும்பநலப் பாதிப்புகளை அடைவர்.

அதிஷ்ட நாட்கள்: மே 14 15 16 20 21 24 25
ஜூன் 6 7 8 11 12 13
துரதிஷ்ட நாட்கள்: மே 17 18 19 21
ஜூன் 1 4 5 6 13 14




மிருகசிரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3

மிதுன இராசியில் செனனமானவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 12ல் தாம்ரமூர்த்தியாகிப் பலம்குறைந்து சஞ்சாரம் செய்கிருர். வியாழபகவான் அட்டமத்தில் சஞ்சாரம் செய்வதும் இவர்களின் கஷ்டகாலமே! சனியின் சஞ்சாரமும் இராகுவின் சஞ்சாரமும் இவர்களுக்கு ஓரளவு ஆறுதலளிக்கும் எப்படியாயினும் இவர்களுக்கு தேகநலக்குறைவு, பந்துசனதுன்பம், பொருள்நட்டம் அலைச்சல் பெரியவர்கள் விரோதம் விபத்து அகால மரணம் அந்நியர்உதவி பொருள்வரவு அந்நியதேசசஞ்சாரம் முதலான சுபாசுப பலன்கள் கலந்து நிகழும். அட்டமத்துவியாழன் விபத்துக்களையும் புத்திர சோகசம்பவங்களையும் ஏற்படுத்தலாம்.

குடும்பஸ்தர்களுக்கு குடும்பப்பிணி பீடைகள் கவலைதரும். புத்திரர் துன்பம் சோகசம்பவங்கள் தொடரும். குடும்பவருமானம் குறைவுறும். குடும்பத்தில் அமைதிக்குறைவு காணும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகளில் நட்டமே ஏற்படும். வர்த்தகநிலையங்களின் வியாபாரநேரங்கள் குறைவதால் வியாபார மந்த நிலைதொடரும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் லாபம்தரும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகளின் மத்தியில் திண்டாடவேண்டிய சூழ்நிலைகள் அதிகம் ஏற்படும். சிலருக்குப் பதவி யிழப்புகள் கூட ஏற்படவும் கூடும். விபத்து அகால மரணங்கூடச் சிலருக்கு ஏற்படலாம்.

விவசாயிகளுக்குப் பயிர்ச்செழிப்பு காணும். கூலியாட்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும். விளைவுகளைச் சந்தைப்படுத்துதலில் சிரமங்கள் ஏற்படும். தரகர் முதலானவர்களின் கெடுபிடிகளால் பயிர்விளைவில் நட்டமும் ஏற்படலாம்.

தொழிலாளர்களுள் ஒத்துழைப்பு அதிகரிக்கும். வேலைவாய்ப்புக்கள் கிடைக்கும். ஆனால் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் பெறுவதில் சிரமங்கள் ஏற்படும். தொழில் ஒப்பந்தங்கள் ஏமாற்றங்களையும் (இடை நிறுத்தங்களையும்) தரலாம்.

மாணவர்கள் கல்வியூக்கம் குறைவுறும். ஆசிரியர் - மாணவர் மத்தியில் கருத்து மோதல் அதிகரிக்கும். கல்விக் குழப்பநிலை நீடிக்கும். பரீட்சைத் தேர்ச்சிகளும் திருப்தி தரமாட்டாது.

பெண்களுக்குக் காதல் விவகாரங்கள் ஏமாற்றங்களையும் மனக்கசப்புக்களையும் ஏற்படுத்தும். கன்னிப் பெண்களுக்கு விவாக முயற்சிகள் முடிவில்லாமல் நீண்டுகொண்டு போகும் அல்லது தோல்வியைத் தழுவும்.

அதிஷ்ட நாட்கள்: மே 14, 17, 18, 19, 22, 23 27 28, 31, ஜூன் 1, 9, 10, 14

துரதிஷ்ட நாட்கள்: மே 19, 20, 21, ஜூன் 2, 3, 4, 6, 7, 8.



## கடகம்

புனர்பூசம் 4-ம் கால், பூசம், ஆயிலியம்

இந்த இராசியில் ஜனனமானவர்கட்கு இந்த மாதம் சூரிய பகவான் 11-ல் ரஜத மூர்த்தியாகிச் சமபலத்துடன் 7-ல்சஞ்சாரம் செய்கின்றார். குருவின் சஞ்சாரம் நன்மையாகும். 4-ல் கேதுவும் 5-ல் சனியும் யுரேனசும் சஞ்சாரம் செய்வது நன்மை தரமாட்டாது. 31-5-85 வரை செவ்வாயின் சாரம் நன்மைதரும். அதன் பின் மாதம் முடியும் வரை செவ்வாயின் சாரம் பாதகமாக அமைகின்றது. பொதுவாக இவர்களுக்கு இம்மாதம் சமபலன்களே நிகழும். குடும்பத்தில் பெரியவர்களின் உதவி அவ்வப்போது கிடைக்கும். எதிர்பாராத சங்கடங்கள், பொருள் நட்டம், மனக்குழப்பம் முதலான தொல்லைகள் அவ்வப்போது ஏற்படும்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்ப சுகக்குறைவு அடிக்கடி ஏற்படும். புத்திரர் உதவிகள் கிடைக்கும் பொருள் வருமானம் குறைவுறும். கூடிய வரை இனபந்துக்களிலிருந்து விலகி வாழ்வதால் பந்துசன கலகங்களிலிருந்து தப்பமுடியும்

வர்த்தகளுக்கு ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் லாபந்தரும். வங்கி நிதி நிலைமைகள் சீராக இருக்கும். புது முதலீடுகள் லாபம் தரும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுகளும் வேலை நிர்ப்பந்தங்களும் ஒருங்கே நிகழும். சிலருக்குப் பதவியுயர்ச்சிகளும் கிட்டும். எதிர்பாராத திடீர் நெருக்கடிகளும் ஏற்படலாம்.

விவசாயிகட்கு இயற்கை ஏதுக்களால் பயிர் அழிவுகள் அதிகரிக்கும். பண்ணைத் தொழில் விவசாயிகள் கூலியாட்களின் கெடுபிடிகளைச் சமாளிக்க வேண்டியிருக்கும் விளைவுகளைச் சந்தைப் படுத்துவதிலும் சிரமங்கள் எழலாம்.

தொழிலாளர் மத்தியில் வேலையின்லாத் திண்டாட்டம் அதிகரிக்கும். தொழில் ஒப்பந்தங்களைக் குறித்த காலத்தில் நிறைவேற்றமுடியாத நிர்ப்பந்தங்கள் ஏற்படலாம். இயந்திர - வாகனத் தொழிலாளர்கட்கு விபத்துக்களைச் சமாளிக்கநேரும்.

மாணவர்கட்கு கல்விக் குழப்பநிலை தொடரினும் கல்வியூக்கமும் சுயமுயற்சியும் அதிகரிக்கும். ஆசிரியர் - மாணவர் ஒத்துழைப்பு பெருகும். பரீட்சைகளின் முடிவுகளும் ஓரளவு திருப்தி தரும்.

பெண்களுக்கு கணவன்மாரின் அரவணைப்புக் கிட்டும். கன்னிப் பெண்களின் விவாக விடயத்திலும் சிரமங்கள் மத்தியிலும் நிறைவு காட்டும். காதல் விவகாரங்கள் முடிவுறாச் சூழ்நிலை வலுப்படும்.

அதிஷ்ட நாட்கள்: மே 14 15, 16, 20 2[illegible], 24, 25, 30, ஜூன் 7, 11, 12 13

துரதிஷ்ட நாட்கள்: மே 14, 22, 23, 24, ஜூன் 4, 5, 6, 8, 9, 10.



# சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1-ம் கால்

சிங்கராசியினர்க்கு இம்மாதம் சூரியபகவான் 10-ல் லோகமூர்த்தியாகிப் பலம்குறைந்து சஞ்சாரம் செய்கின்றார். குரு 6-ல் சஞ்சாரம் செய்வதும், சனி 4-ல் சஞ்சாரம் செய்வதும், ராகு 9-ல் சஞ்சாரம் செய்வதும் நன்மைதராது. தேகநலக் குறைவு, பொருள்நட்டம், சிறைப்பயம், நெருங்கிய பந்துக்களுக்குள் துக்கசம்பவங்கள், வாகன நட்டம், போக்குவரவில் துன்பம், காரியங்களில் தடை தாமதம், முதலிய பலன்கள் நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பாதிபன் ராகு சூரியர் சேர்க்கை பெறுதலின் குடும்பத்தில் பிணக்குகள் பிணி பீடைகள் அதிகரிப்புக் காணும். புத்திரர் வழியில் செலவுகள், துன்பங்கள் தொடரும். செலவு அதிகரிக்கும்.

வர்த்தகர்கட்கு வியாபாரம் எதிர்பார்த்தலாபந்தரா. மாத ஆரம்பத்தில் அழகுசாதன விளையாட்டுப் பொருள் வியாபாரிகளுக்கு ஓரளவு லாபம் கிட்டினாலும் மந்தநிலை தொடரும். புது முதலீடுகளைத் தவிர்க்கவும்.

உத்தியோகத்தர்களுக்கு சூரியன், செவ்வாய் 10-ல் திக்குப்பலம் பெறுவதால் பதவியுயர்வு, மேலதிகாரிகளின் பாராட்டு என்பன கிடைப்பதோடு வேலைப்பழுவும் அதிகரிக்கும். சகஊழியர்களின் அவநம்பிக்கையும் ஏற்படும்.

விவசாயிகளுக்குப் பயிர்ச்சேதம் அதிகரிக்கும். வங்கி நிதி உதவிகள் கிடையாது. தரகர் முதலியோரின் சுரண்டல் அதிகரிக்கும். கூலியாட்களின் விடயத்தில் முன்னெச்சரிக்கை தேவை.

தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் குறைவடையும். முதலாளிமாரின் அவநம்பிக்கையையும் எதிர்நோக்க வேண்டும். வாழ்க்கைத்தரம் குன்றும்.

மாணவர்களுக்கு குழப்பநிலையே தொடரும். ஆசிரியர் - மாணவர் கருத்து வேற்றுமை கூடும். பரீட்சைத் தேர்வும் எதிர்பார்த்தபடி அமையாது.

பெண்களுக்கு சோதனையான காலமாக இருக்கிறது. காதல் விவகாரங்கள் சிக்கலையும் ஏமாற்றங்களையும் தரும். உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி அடக்கமாகச் செயற்படுவது நன்மைதரும்.

அதிஷ்ட நாட்கள்: மே 17 18 19 22 23 24 26 27,
ஜூன் 4 5 6 13 14

துரதிஷ்ட நாட்கள்: மே 14 15 16 24 25 26,
ஜூன் 7 8 11 12



# கன்னி

உத்தரம் 2 3 4, அத்தம், சித்திரை 1 2

கன்னிராசியில் ஜனனமானவர்கட்கு சூரியபகவான் 9-ல் தாம்ர மூர்த்தியாகிப் பலம் குறைந்து பவனிவந்தாலும் முக்கிய கிரகங்களான குரு, சனி என்பவற்றின் சஞ்சாரம் நன்மையானதாகும். சமசுகம், பெரியோர் உதவி, பொருள் வரவு, அந்நியர் சகாயம், சகோதரர் துன்பம், குடும்பச்சிறப்பு, குடும்பத்தில் மங்கல நிகழ்ச்சிகள் போக்குவரவில் பயம், வீடுவாகனவசதி முதலிய பலன்கள் கலந்து நிகழும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பச்சிறப்பு, பந்து மித்திரர் உதவி கிட்டும். குடும்ப வருமானம் அதிகரிக்கும். வீட்டில் சுபகருமங்கள் நிகழலாம். புத்திரரால் உதவி கிடைக்கும்.

வர்த்தகர்கட்கு முதலீடுகள் எதிர்பார்த்த லாபம் தராது. கறுப்புச்சந்தை வியாபாரிகள் லாபம் பெறுவர். எப்படியாயினும் வியாபாரம் மந்தநிலையடையும்.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்புக்கள் அதிகரிக்கும். சிலருக்கு இடமாற்றங்களும் கிடைக்கும். சக உத்தியோகத்தரின் ஒத்துழைப்பு ஆறுதல்தரும். வருமானத்திலும் பார்க்கச் செலவுகள் அதிகரிப்பதால் வாழ்க்கைத்தரம் குன்றும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி முன்னேற்றம் தரும். வங்கிநிலை - மானியம் - பசளை வசதிகள் கிடைக்கும். பண்ணைத்தொழில் முன்னேற்றம் காணும். விளைவுகளைச் சந்தைப்படுத்துவதில் சிரமங்கள் உண்டாகும்.

தொழிலாளருக்கு வேலை வசதிகள் அதிகரிக்கும். முதலாளி - தொழிலாளர் மத்தியில் ஒத்துழைப்பும் நல்லெண்ணமும் அதிகரிக்கும். வருமானம் கூடுதலால் வாழ்க்கைத்தரம் உயரும்.

மாணவர் கல்வியூக்கம் அதிகரிக்கும். ஆசிரியர் மாணவர் நல்லுறவு வளரும். சுயமுயற்சி மாணவருக்குச் சிறப்புச் சித்திகளைக் கொடுக்கும்; கலைத்துறைக் கல்வி மாணவருக்கு விசேட நன்மைகள் கிடைக்கும்.

பெண்களுக்கு முன்பு தடைப்பட்டிருந்த விவாகசம்பவங்கள் சுமுகமாக நிறைவேறக்கூடிய சூழ்நிலைகள் தோன்றும். காதல் விவகாரங்கள் மன நிறைவுகளைக் கொடுப்பினும் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக்கொள்ளுதல் நல்லது. குடும்பப் பெண்களுக்கு கணவனின் அரவணைப்பு ஆறுதல் தரும்.

அதிஷ்ட நாட்கள்: மே 19,20,21,25,26,29,30.
ஜூன் 2,3,4,6,7,8.

துரதிஷ்ட நாட்கள்: மே 14,17,18,27,28.
ஜூன் 9,10,13,14,




சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3.

இந்த இராசியில் சென்மமானவர்களுக்கு இந்த மாதம் சூரியன் அட்டமத்தில் (8) சுவர்ண மூர்த்தியாகித் தானபலம் குறைந்தாலும் மூர்த்தி பலம் பெறுவது நன்மையாகும். மற்றும் பிரதான கிரகங்களான வியாழன், இராகு கேதுக்களின் துர்க்கோசரசஞ்சாரத்துடன் ஏழரைச் சனியின் காலமும் நிகழுவது தீமையாகும். பெரும்பாலும் இவர்களுக்கு இந்தமாதம் நன்மை, தீமை கலந்த பலன்களே அதிகம் நிகழும். உடல் நலக்குறைவு குடும்பத் தொல்லை, தடைதாமதங்களுக்குமேல் காரியசித்தி, அலைச்சல் பொருள்நட்டம், முதலான பலன்கள் நிகழும். சிலருக்கு நரம்பு சம்பந்த நோய்கள்; சித்த சுவாதீனக் குறைவுகள் கூட ஏற்படலாம்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்ப உறவுகளில் பாதிப்புகள் ஏற்படும். அவ்வப்போது சச்சரவுகள் பிணக்குகள் இடம்பெறும். குடும்பச் செலவுகள் அதிகரிப்பால் வாழ்க்கை வசதிகள் குறைவதுடன் கடன் பயமும் ஏற்படும்.

வர்த்தகர்களுக்கு மிகவும் எச்சரிக்கையான காலம். கூடியவரை புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. பங்கு முதலீடுகளால் நட்டமே கிடைக்கும். வங்கிநிலை கவலைக்குரியதாக இருக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் கெடுபிடிகளுடன் கூடிய ஆதரவும் கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத இடமாற்றங்களும் கிடைக்கும். சக உத்தியோகத்தரின் ஒத்துழைப்புக் கிடையாது. சிலருக்கு பதவியிறக்கம் அல்லது பதவி நீக்கம் கூடக் கிடைக்கலாம்.

விவசாயிகளுக்குப் பயிர் உற்பத்தியில் பகீரதப் பிரயத்தனம் செய்யவேண்டியதாக இருக்கும். கூலியாட்களின் பிரச்சினைகள் பயிரழிவுக்கு ஏதுவாகவும் மாறினாலும் ஆச்சரியமில்லை.

தொழிலாளருக்கு வேலையில்லாத் திண்டாட்டமும் தொழிலாளர் பிணக்குகளும் அதிகரிக்கும். அரசாங் கூட்டுத்தாபனத் தொழில் ஒப்பந்தங்களால் லாபத்துக்குப்பதில் பிரச்சினைகளே வளரும் நிதானமும் முன் எச்சரிக்கையும் இவர்களை ஓரளவு காப்பாற்றும்.

மாணவர் கல்விக்குழப்பநிலை நீடிக்கும். அக்கறையின்மை - மறதி - சோம்பல் முதலான குணங்கள் மாணவர்கள் மத்தியில் மிகும். பரீட்சை முடிவுகளும் மனம்போல் திருப்தியளியாது.

பெண்களுக்குப் பொறுமையின் சோதனை காலமாக இருக்கும். காதல் விவகாரங்கள் முடிவு பெறாமல் அல்லது தோல்வியில் முடியும். குடும்பப் பெண்கள் வேதனை தரும் புதிய அனுபவங்களை எதிர்நோக்க வரும்.

அதிஷ்டநாள்கள்: மே, 14மு.ப.22,23,24,26,27.
ஜூ 1,4,5,6,8,9,10.

துரதிஷ்டநாள்கள் மே. 15, 16, 19, 20, 21,29,
ஜூ. 11,12,13.




விசாகம் 4ம் கால், அனுஷம், கேட்டை

விருச்சிகராசியில் சென்மமானவர்களுக்குச் சூரிய பகவான் இந்தமாதம் 7ல் ரஜத மூர்த்தியாகப் பலம் குறைந்து சஞ்சாரம் செய்கின்றார். அத்துடன் ஏழரைச் சனியின் (குரூர) காலமும், குருவின் குரூர கோசார காலமும் சேர்ந்து நிகழுவது இவர்களின் துரதிஷ்டமே. "பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்பதற்கு இணங்க இவர்கள் வாழ்க்கை அமையும். எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் குடும்பத் தொல்லை

இனசனவிரோதச் சம்பவங்கள், குடும்பத்தில் பேரிழப்புக்கள், அலேச்சல், அரசாங்கத் தொல்லே, அந்நிய தேசசஞ்சாரம் முதலான பலன்களே அதிகம் நிகழும். சனி தசை சனிபுத்தி நிகழுபவர்களுக்கு கடின கஷ்டகாலமாக அமையும்; தெய்வதுணே தான் இவர்களேக் காக்கும்.

குடும்பத்தவர்களுக்கு குடும்பத்தில் துயர சம்பவங்கள் மிகும். குடும்பப் பிரிவுகள், பகைவிரோதச் செயல்கள் மிகும். குடும்ப வருமானம் வீழ்ச்சியடைதலால் கடன் பயம் கவலே தரும்.

வர்த்தகர்களுக்கு ஊழியர்களே பகைவர்களாக - நட்டம் விளேவிப்போராக மாறிவிடுவர். அவசர புத்தியும், ஆராய்வின்மையும், கடும் சொற்பிரயோகமும் வாடிக்கையாளரின் வருகையைக் குறைத்துவிடும். வங்கி நிதிநிலேமைகள் கவலே தரும்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் கெடுபிடிகளுடன் சக ஊழியர்கள் பொதுமக்களின் வெறுப்பையும் சமாளிக்க வேண்டி நேரும். சிலருக்கு பதவியிறக்கம் அல்லது வேலே நீக்கம் கூடக் கிடைக்கும்.

விவசாயிகளுக்கு இந்தமாதம் பயிர்ச்செய்கை நட்டத்தையே தரும். கூலியாட்கள் சமயத்தில் காலேவாரி விடுவார்கள். தரகர் முதலியோரின் சுரண்டல்கள் சந்தை வாய்ப்புக்களே நட்டம் பெறச் செய்யும்.

தொழிலாளர்கள் மத்தியில் தொழில் பிணக்குகள் வலுவடையும். முதலாளிமார்களின் கெடுபிடிகளும் தொல்லே தரும். வேலேநீக்கம், அல்லது வேலேயின்மை இவர்களுக்குப் பிரச்சினேகளேக் கொடுக்கும்.

மாணவர் கல்வி மறதி, சோம்பல், அக்கறையின்மைகளால் பெரிதும் பாதிக்கப்படும். பரீட்சை முடிவுகள் சாதகமாக அமையமாட்டாது. ஆசிரியர் மாணவர் உறவில் விரிசல் அதிகரிக்கும்.

பெண்களின் காதல் விவகாரங்கள் தோல்வியில் அல்லது ஏமாற்றத்தில் முடியும். குடும்பப் பெண்களுக்கு பலவகையிலும் எதிர்பாராத திடீர் நெருக்கடிகள் பெரும் பிரச்சினேகளேத் தரும். எவ்வகையிலும் இவர்களின் பொறுமைக்குச் சோதனே காலமாகும்.

அதிஷ்டநாள்கள்: மே. 14, 15,16,24,25,26,29. ஜூ. 2,3,4,மு.ப. 7,8,11,12,
துரதிஷ்டநாள்கள்: மே, 17,18,19,22,23,24,31, ஜூ. 1,13,14,



# தனுசு

மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் கால்

தனு இராசியில் பிறந்தவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 6ல் லோகமூர்த்தியாகித் தானபலம் அடைந்தாலும் மூர்த்தி பலம் குறைவதால் நன்மை தீமைகலந்த கலந்த சம பலன்களே நிகழும். வியாழன் 2ல் சஞ்சாரம் செய்வது நன்மையாகும். ஆனல் ஏழரைச் சனியின் ஆரம்ப காலமும் சேருவதால் எவ்வகையிலும் சமபலன்களே நிகழும். பொருள்வரவு, பெரியோர் உதவி பந்து சன நன்மை, அந்நியர் துன்பம், அலேச்சல் மூலம் காரியசித்தி, விற்றல் வாங்கல் மூலம் லாபம் முதலான தொல்லேகள் இராசாங்க நன்மை முதலியன கலந்து நிகழும்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்ப சுகம் சுமாராக இருக்கும். குடும்பவருமானத்திலும் செலவு அதிகரிக்கும். புத்திரர் உதவியும் உபத்திரவங்களும் ஒரே சமயத்தில் நிகழும். பெரியவர்களின் உதவியால் குடும்ப சமாதானம் காப்பாற்றப்படும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகள் லாபம் தரும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் எதிர்பாராத லாபந் தரும். ஆனல் விபத்துக்கள் மூலம் நட்டம் ஏற்பட இடமுண்டு. அழகுசாதனப் பொருள் வியாபாரிகள் அதிகலாபம பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு பதவியுயர்வு முதலிய வற்ருேடு கூடிய வேலேப் பொறுப்புக்களும் ஆறுதலின்மையும் மன உளேச்சலேத் தரும். கீழ் ஊழியர்களின் ஒத்துழைப்புக் குறைவுறும். வருமானத்திலும் (அநாவசியச்) செலவுகள் அதிகரிக்கும்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்திச் செலவினங்கள் மட்டுப்படுத்த முடியாத நிலே நீடிக்கும். கூலியாட்களின் ஒத்துழைப்பு சமயத்துக்குக் கிடையாது போதலால் பயிர் பாதுகாப்பும், விளேவும் குறைவுறும்.

தொழிலாளர்களுக்குத் தொழில் வாய்ப்புக்கள் கிடைக்கும் அநாவசியச் செலவுகள் அதிகரிப்பால் வருமானத்தில் பற்றுக்குறைவு ஏற்படும். தொழிலாளருக்கிடையில் போட்டியும் ஒத்துழைப்பின்மையும் ஊதியக் குறைவுக்குக் காரணமாகும்.

மாணவர் கல்வியூக்கம் சீராக இருக்கும். கலைத் துறை சட்டத்துறை மாணவர்களுக்குக் கல்வித் தேர்ச்சிக்கு வசதிகள் ஏற்படும். ஆசிரியர் ஆதரவும் ஒத்துழைப்பும் திருப்தியளிக்கும்.

பெண்களுக்குக் காதல் விவகாரங்கள் சிரமங்களுக்கிடையில் சுமுகமாக விவாக சித்தியையும் கொடுக்கும். குடும்பப் பெண்களுக்குக் கணவன்மாரின் ஆதரவு மகிழ்ச்சி தரும். வேலை செய்வோருக்கு வேலை கொள்ளுவோரின் நன்மதிப்புக் கிடைக்கும்.

அதிஷ்டநாள்கள்: மே. 14, 17, 18, 26, 27, 28, ஜூ. 1, 4, 5, 6, 8, 9, 10, 13, 14,
துரதிஷ்டநாள்கள்: மே. 19, 20, 21, 24, 25, ஜூ 2, 3, 4.




உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2,

மகரராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 5ல் தாம்பர மூர்த்தியாகிச் சமபலத்துடன் சஞ்சாரம் செய்வதும், சனிபகவான் லாபத்தில் பலம் பெறுவதும் நன்மையாகும். குரு சென்மத்திலும் இராகு 4விலும் கேது 10விலும் 31-5-85 வரை செவ்வாய் 5லும் சஞ்சாரம் செய்வது தீமையாகும். இவர்களுக்கு நன்மை தீமைகள் கலந்த சுபாசுப பலன்களே பெரும்பாலும் நிகழும். பொருள்வரவு, அந்நியர் உதவி, அந்நிய தேசசஞ்சாரம், வயிறு நரம்பு சம்பந்தமான பிணி பீடைகள், குடும்பத்தில் எதிர்பாரா நிகழ்ச்சிகள் ஏற்படுதல், புத்திரர் துன்பம், முதலானவை கலந்து நிகழும்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்பாதிபன் லாபத்தில் இருத்தலின் குடும்ப வருமானம் அதிகரிப்புக் காணும். குடும்பத்தில் அவ்வப்போது சிறுசிறு சச்சரவுகள் தோன்றி மறையும். அந்நியர் உதவி, அந்நியதேசப் பொருள் வரவுகள் கிடைக்கும்.

வர்த்தகர்களுக்கு வியாபார மந்த நிலையே இந்த மாதமும் தொடரும். ஆனால் கிறுப்புச் சந்தை வியாபாரிகள் இலாபமடைவர். எனினும் பொருள் நட்டமும், ஆபத்தும் ஏற்படலாம்.

உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளின் சீற்றங்களையும், பொதுமக்களின் அவநம்பிக்கை - வெறுப்புக்களையும் ஒருங்கே சமாளிக்க வேண்டும். சிலருக்கு பதவி இறக்கம் அல்லது வேலை நீக்கம், கஷ்டப் பிரதேச இடமாற்றங்கள் ஏற்படலாம்.

விவசாயிகளுக்கு பயிர் உற்பத்தி சிறப்படையும். கூலியாட்களின் ஒத்துழைப்பு விளைவுகளை அதிகரிக்கச் செய்யும். எனினும் அதிகாரிகளின் கெடுபிடிகளும், தரகர் முதலியோரின் உபத்திரவங்களும் சந்தை வாய்ப்புக்களைக் குறைக்கும்.

தொழிலாளருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். முதலாளிகள் தொழிலாளர் உறவுகளில் நீண்ட கருத்து வேறுபாடுகள் உண்டாகும். தொழிற் பிணக்குகள் தீர்ப்பு வழங்குவதற்கு முடியாமல் நீண்டுகொண்டு போகும்.

மாணவர்களுக்கு கல்வியூக்கம் அதிகரிப்புக் காணும். முக்கியமாகக் கலைத்துறை மாணவர்களுக்கு முன்னேற்றம் கிடைக்கும். கல்விச்சாலைகளிலும் ஆசிரிய மத்தியிலும் குழப்ப நிலைகள் தொடரும்.

பெண்களுக்கு விவாகாதி விஷயங்களில் தடை தாமதங்களே ஏற்படும். காதல் விவகாரங்கள் தோல்விகளில் முடிவுறும். குடும்பப் பெண்களுக்கு குடும்ப வருமானம் இருப்பினும், குடும்ப சுகவீனம் முதலியன துன்பந் தரும்.

அதிஷ்ட நாட்கள்: மே 14, 15, 16, 20, 21, 29, 30 ஜூன் 2, 3, 7,
துரதிஷ்ட நாட்கள்: மே 22, 23, 24, 26, 27, ஜூன் 4, 5, 6.




அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2 3 ம் கால்

கும்பராசியில் செனனமானவர்களுக்கு இந்த மாதம் சூரியபகவான் 4-ல இரஜத மூர்த்தியாகிச் சமபலத்துடன் சஞ்சாரம் செய்கின்றார். குருவும், சனியும் முறையே 12 இலும் 10 இலும் சஞ்சாரம் செய்வது தீமையாகும். சூரியனைச் சனி திருஷ்டி செய்வதும் கவனிக்கப்பட வேண்டும். பொதுவாக இவர்களுக்குத் தேகசுகம், குடும்பசுகம் பாதிப்புறும். சிலருக்குத் தீர்த்த யாத்திரைப் பலன்கள ஏற்படும். பொருள் நட்டம், காரியத் தடை தாமதம், முக்கிய குடும்பஸ்தர் மறைவு, அற்ப பொருள்வரவும் ஏற்படும்.

குடும்பத்தவர்களுக்குக் குடும்ப வருமானம் குறைவுறும். குடும்ப சுகமும் பாதிப்படையும். குடும்பத்தில் சச்சரவுகள், சிறுசிறு பிணக்குகள் தோன்றி மறையும். குடும்ப அமைதி குன்றும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகள் இலாபம் தர மாட்டாது. அலங்கார அழகுசாதனப் பொருள் வியாபாரிகள் இலாபமடைவர். எனினும் அநாவசியச் செலவுகளும் ஏற்படவே செய்யும்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் நெருக்கடிகள் அடிக்கடி ஏற்படும் மனவெறுப்பான உத்தரவுகளை நிறைவேற்ற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை வருதலால் சிலர் வேலையை உதறித் தள்ளியும் விடுவார்கள்.


விவசாயிகளுக்குப் பயிரழிவுகள் ஏற்படும். கூலியாட்களின் பிரச்சினை அதிகரிக்கும். பண்ணைக் கமங்களால் அல்லது கூட்டுக் கமங்களால் நட்டம் விளையும்.

தொழிலாளர்களின் தொழிற் பிரச்சினைகள் அதிகரிக்கும். உழைப்புக்கேற்ற ஊதியம் பெறுவது முயற்கொம்பாக இருக்கும். எண்ணெய், இரும்பு சுத்திகரிப்புகள் முதலானவை சம்பந்தப்பட்ட தொழிலாளர்கட்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்.

மாணவர் கல்வித்தடைகளை எதிர்நோக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை தொடரும். ஆசிரியர்கள் கல்விக்கூடங்களின் எதிர்ப்புக்கள் கவலை தரும். கல்வித்தேர்ச்சியும் எதிர்பார்ப்புக்களுக்கு முன்னேற்றம் பெறுது.

பெண்களுக்கு - முக்கியமாகக் கன்னிப்பெண்களுக்கு முன்னெச்சரிக்கை தேவை. காதல் விவகாரங்கள் பெரும்பாலும் தோல்விகளில் முடியும்; விவாகப் பேச்சுக்களில் தடைதாமதங்களும் அநாவசியச் செலவுகளும் ஏற்படும்.

அதிஷ்ட நாட்கள்: மே 14, 17, 18, 19, 22, 23, 24, 31, ஜூன் 1, 4, 5.
துரதிஷ்ட நாட்கள்: மே 24, 25, 26, 29, 30, ஜூன் 6, 7, 8.



## மீனம்

பூரட்டாதி 4-ம் கால், உத்தரட்டாதி, ரேவதி

மீன ராசியில் பிறந்தவர்களுக்கு இந்தமாதம் சூரியபகவான் 3-ல் சுவர்ண மூர்த்தியாகிப் பலம் பெறுவது விசேடமான நன்மைகளைக் கொடுக்க ஏதுவாகும். இத்துடன் இராசிஅதிபதி இலாபத்தானத்தில் சுபகோசர சஞ்சாரம் செய்வதும் நன்மையாகும். தேகசுகம், குடும்பசுகம் என்பன வற்றில் அபிவிருத்தி காணும். குடும்ப வருமானம் போதியளவு முன்னேற்றமடையும். எடுத்த காரியங்கள் நிறைவுபெறும்.

குடும்பத்தில் சிறப்பான மங்கல நிகழ்ச்சிகள் நிறைவு பெறும். குடும்பத்தில் நல்லுறவு வளரும். புத்திரர் சிறப்பு - புத்திரர் வழி உதவிகள் கிடைக்கும். இனபந்துக்கள் சேர்க்கை, பொருள் வரவுகள் மனமகிழ்ச்சிகளைக் கொடுக்கும்.

வர்த்தகர்களுக்கு முதலீடுகள் லாபம் தரும், வங்கி நிதி நிலைமைக்ள் திருப்தியளிக்க மாட்டாது. ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகம் விசேட வருமானத்தைக் கொடுக்கும். பங்கு முதலீடுகளைத் தவிர்த்தல் நல்லது. பவுண் பொன் வியாபாரிகள் இலாபம் பெறுவர்.

உத்தியோகத்தர்களுக்கு மேலதிகாரிகளின் பாராட்டுக்களும், பதவியுயர்ச்சிகளும் கிடைக்கும். சிலருக்கு எண்ணம்போல் வசதியான இடமாற்றங்களும் கிடைக்கும். சிலருக்கு எண்ணம்போல் வசதியான இடமாற்றங்களும் கிடைக்கும். கீழ் உத்தியோகத்தர்களின் ஆதரவுமுண்டு.

தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும். வருமானம் அதிகரிக்கும். வாழ்க்கையில் மனநிறைவுண்டாகும்.

விவசாயிகளுக்கு விவசாய உற்பத்தி இயற்கைப் பாதிப்புக்களால் குறைவும். ஆனால் விளைவுகளுக்கு நல்ல சந்தை வாய்ப்புக்கள் கிடைக்கும். பண்ணைக்கமஞ் செய்பவர்கள் வருமானம் அதிகரிக்கும்.

மாணவர்கள் கல்வி ஊக்கம் சிறப்படையும். ஆசிரியர் - மாணவர் கூட்டுமுயற்சிகள் முற்னேற்றம் காணும். பரீட்சைத் தேர்வுகளும் மனநிறைவு தரும். கணித - விஞ்ஞானச் சட்டத்துறைக்கல்வி மாணவர் முன்னேற்றமடைவர்.

பெண்களுக்கு முன்பு தடைப்பட்டிருந்த விவாக முயற்சிகள் நிறைவு காணும். காதல் விவகாரங்களில் முன்னேற்றமும் விவாக சித்தியும் ஏற்படும். குடும்பப் பெண்களுக்கு கணவன்மாரின் ஆதரவும், நல்லெண்ணமும் மனநிறைவைத்தரும்.

அதிஷ்ட நாட்கள்: மே 14, 15, 16, 19, 20, 21, 24, 25, ஜூன் 2, 3, 4, 6,
துரதிஷ்ட நாட்கள்: மே 26, 27, 28, 31, ஜூன் 1, 8, 9, 10.

# மரணத்தை அறியும் முறைகள்

இப்பூவுலகில் பிறந்த ஆன்மாக்கள் யாவரும் இறப்பதென்பது உண்மையானதொன்று. ஆயினும் அது அனைவருக்கும் ஒரே வயதிலோ, ஒரே முறையிலோ ஏற்படுவதில்லை. இப்படி எதிர் பாராத வகைகளில் வரும் மரணத்தை நம் முன்னோர்கள் பல வழிகளில் அறிந்து வந்தனர். ஒவ்வொருவருடைய மரண காலத்தையும் முன்கூட்டியே சோதிட சாஸ்திரமெனும் தெய்வீக விஞ்ஞானம் தெரிவித்த அதே தினத்தில் இறந்தவர்கள் பலருண்டு. மற்றும் கைரேகை - நியூமராலஜி என்னும் எண் சாஸ்திரம் முதலியவைகள் மூலமும் மரண ஆபத்துக்கள் வரும் காலங்களை முன்கூட்டியே அறிந்தனர். ஆனல் எல்லோருக்கும் சோதிடம்-கைரேகை- எண் சாஸ்திரம் முதலியன

**★ V. S. ஸ்ரீகந்தசாமி - வத்திராயன் ★**

தெரியாது. தெரிந்தாலும் மிகத் துல்லியமாகக் கணிக்கத் தெரிய வேண்டும். இல்லையேல் தவருன பலன்கள்தான் கிடைக்கும். இவற்றைத் தவிர மிகச் சுலபமாக முனகூட்டியே மரணத்தை அறியும் முறைகள் சர நூல்களில் தெரிவிக்கப் பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம்.

எப்பொழுதும் சூரியன் உதிக்குமுன் ஐந்து நாழிகை தொடங்கி நாசியினின்று சுவாசம் வந்து பன்னிரண்டு அங்குலம் வெளியே செல்லும். அதிலே நான்கங்குலம் வெளியே நின்றுவிட மிஞ்சிய எட்டங்குலமும் உள்ளே போய்விடும். இப்படியே இருபத்திநான்கு மணித்தியாலம் கொண்ட ஒரு நாளில் இருபத்தோராயிரத்து அறுநூறு சுவாசம் விடப்படும். அதிலே ஏழாயிரத்திருநூறு சுவாசம் வெளியே செல்ல மிஞ்சிய பதினாலாயிரத்து நானூறு சுவாசமும் உள்ளே சென்றுவிடும். இந்தச் சுவாசம் ஒவ்வொரு நாசியிலும் இரண்டு மணித்தியாலத்துக்கொரு முறை மாறி மாறி ஓடும்.

ஞாயிறு, செவ்வாய், சனி ஆகிய நாட்களில் உதயத்திற்கு முன் ஐந்து நாழிகை தொடங்கிப் பிங்கலையாகிய சூரியகலை வலப்பக்க நாசியினின்றும் ஓட வேண்டும். திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் இடைக்கலை என்னும் சந்திர கலை இடதுபக்க நாசியினின்று ஓடவேண்டும். வியாழக்கிழமையில் வளர்பிறைக்குச் சந்திரகலையும், தேய்பிறைக்குச் சூரியகலையும் தொடங்கி ஓட வேண்டும். மூச்சுப்பக்கம் மாறும்போது இரண்டு நாசியிலும் சமமாகச் சுவாசம் நடப்பதற்கு சுழுமுனை என்று பெயர்.

இடதுகலை அல்லது பிங்கலை ஓர் இரவு முழுவதும் சுவாசம் இடைவிடாது நடந்தால் அவர் மூன்று வருடத்தில் மரணமடைவார். இதே போல் வலது நாசியில் சுவாசம் பிங்கலை மாறுதல் இல்லாமல் இரண்டு இரவு இரண்டு பகல் இடைவிடாமல் மூச்சு வருமாகில் இரண்டு வருடத்தில் மரணம். ஏதேனும் ஒரு நாசியில் இடைவிடாது மூன்று நாளைக்குச் சுவாசம் நடக்கும் மனிதர் ஒரு வருடத்தில் மரிப்பார். இரவு முழுவதும் இடைகலையும் பகல் முழுவதும் பிங்கலையும் இடைவிடாது நடைபெறும் மனிதர் ஆறு மாதத்தில் மரணமடைவார். இன்னும் ஆகாயம் களங்கமின்றி இருக்கும்போது பூமியில் மேடு பள்ளம் இல்லாத சமநிலத்திலே தன்நிழல் ஐந்தடிக்கும் பத்தடிக்கும் உட்பட்ட வேளையில் அந்த நிழலை நோக்கி நின்று கைகளைத் தொங்கவிட்டு கண்களை இமைக்காமல் தன்நிழலையே பார்த்துக் கொண்டு நின்றுவிட்டு, அப்படியே அண்ணாந்து ஆகாயத்தை நோக்கிப் பார்த்தால் அங்கே தன்னுருவம் பொன்னிறமாகத் தோன்றுமாயின் செல்வம் வரும். வெண்ணிறமாகத் தெரிந்தால் பிராணபயம் இல்லை. செந்நிறமாகத் தோன்றுமாயின் ஆயுட்குறைவுண்டாம். கருமையாயிருந்தால் நலிவுண்டாம். அந்த உருவில் கைகளாவது கால்களாவது தோன்ருதிருந்தால் ஆறு மாதங்களுக்குள் மரணம் நேரிடும். அவ்வுருவம் தலையில்லாமல் தோன்றினல் மூன்று மாதத்திற்குள் மரணம் உண்டாம்.

இன்னும் ஒருவகை: ஆகாயம் களங்கமற்று சூரியன் பிரகாசிக்கும்போது, மரநிழல், வீட்டுத்

தாழ்வார நிழல் முதலிய இடங்களில் நின்று வாய் நிறையச் சலங் கொண்டு துளிகள் பரந்து அணுப் போல பறக்க வெய்யிலே நோக்கி ஓரேமுறையில் உமிழ வேண்டும். உமிழும்போது நீர்த்துளிகளைப் பார்த்தால் பல வர்ணங்களுடன் கூடிய வான வில்லின் தோற்றம் தெரியும். அது தெரிந்தால் ஒரு வருடத்துக்குள் மரணபயம் இல்லை. தெரிய வில்லையெனில் மரணமுண்டு. அவ்வில்லின் நிறம் மாறி ஒரு பெண்ணுருப் போலத் தோன்றுமாயின் ஆறு மாதத்துள்ளே மரணம் நேரும்.

இன்னும் ஆகாயம் களங்கமற்றிருக்கும் காலங் களில் ஒரு சாண் அகன்ற செப்புப் பாத்திரத்தில் நெய்யை உருக்கிவிட்டு, அதனுள்ளே அமாவாசை தினத்தில் நடு உச்சியில் வரும் சூரியனையோ அல் லது பூரணை தினத்தில் நடு உச்சியில் வரும் சந்தி ரனையோ பார்த்தால் அங்கே தோன்றும் சூரிய சந்திரர் வெண்ணிறமாகத் தோன்றினால் பிராண பயமின்மையும், செந்நிறமாகத் தெரிந்தால் வாழ் வும், பொன்னிறமாக இருந்தால் விரைவில் கேடும், பசுமை நிறமாகவிருந்தால் நோயும், கருமையாக இருந்தால் விரைவில் சாவும் வரும். சூரிய, சந் திரர்களுடைய தென்புற வட்டம் குறைந்தால் ஒரு வருடத்திலும், மேற்புற வட்டம் குறைந் தால் ஆறு மாதத்திலும், வடபுற வட்டங் குறைந் தால் மூன்று மாதத்திலும், கீழ்ப்புற வட்டங் குறைந்தால் ஒரு மாதத்திலும், நடுவில் துவாரம் இருந்தால் பத்து நாளிலும் மரணம் வரும்.

இன்னும் சில: வாய்வு தவிர்ந்த ஏனைய நிலை களில் கை, கால், நெற்றி, கன்னம் இவை அடர்ந்து துடித்தால் மரண விபத்து வருமென்று அறிக. அதிலும் கை துடித்தால் ஒரு வருஷம், கால் ஆறு மாதம், நெற்றி மூன்று மாதம், கன் னம் பத்து நாள் என்று கொள்ள வேண்டும். இது தவிர தன் புருவத்தைப் பார்த்தால் தெரி யாதவர்களுக்கு ஒன்பது நாளிலும், திடீரென்று காது கேட்காது விட்டால் ஏழு நாளிலும், இர வில் நட்சத்திரம் தெரியாதவர்களுக்கு ஐந்து நாளிலும், மூக்குநுனி தெரியாதவர்களுக்கு மூன்று நாளிலும், வாய் குழறிப் பேச்சழிந்தால் இரண்டு நாளிலும் மரணம் சம்பவிக்கும் என்றும் கொள் ளப்படும்.

மேலும் ஞாயிற்றுக்கிழமையில் அதிகாலையிலே சூரியகலை முன்னரோடாமற் சந்திரகலை ஓடுமாயின் நோயுண்டாகும். திங்கட்கிழமையில் இடைகலை யோடாமற் பிழைக்குமாயின் இல்லத்தை விட்டு வேறிடம் போக நேரிடும். செவ்வாய் அதிகாலை பிங்கலை ஓடாது பிழைக்குமாயின் நோயும், மர ணமும், சண்டையும் ஏற்படும். புதன் கிழமை யிலே ஓடாது பிழைக்கில் வம்சத்துத் தலைவருக்கு ஆகாது. வியாழக் கிழமையிலே முன்பு சொல்லிய படி ஓடாது பிழைக்குமாயின் அரசனுக்குத் துன் பம் வரும். வெள்ளிக்கிழமை சந்திரகலை ஓடாது பிழைக்கின் மனைவி மரணம். சனிக்கிழமையில் ஓடாது பிழைக்குமாயின் வறுமை. இப்படியே ஏழு வாரச் சரமும் சொல்லப்பட்ட முறை மாறிப் பிழைத்தோடுமாயின் மரணம் நேரிடுதல் திண்ணம்.

மேலும் சில நற்பலன்கள்: பிங்கலை ஓடும் போது வியாபாரஞ் செய்தல், வழக்குப் பேசுதல், வாகன மேறுதல், மருந்துண்ணல், போசனஞ் செய்தல் முதலானவைகள் செய்யலாம்.

சந்திரகலை ஓடும்போது புது வஸ்திரம் தரித் தல், ஆபரணந் தரித்தல், விவாகஞ் செய்தல், வீடு வாங்குதல், குடி புகுதல் முதலிய நற்கரு மங்கள் செய்யத்தக்கனவாகும்.

மனிதர்கள் விடும் (மூச்சு) சுவாசம் எவ்வளவு குறையுமோ அவ்வளவுக்கு ஆயுள் அதிகரிக்கும். திடீரென சுவாசத்தைக் குறைக்க முயலக்கூடாது. விரைவாக ஓடுவதாலும், நடப்பதாலும், அதிகம் சாப்பிடுவதாலும், தூங்குவதாலும், சிற்றின்பக் காரியங்களாலும் மனிதனின் சுவாசம் அதிகரிக் கிறது. எனவே இதை எல்லோரும் உணர்ந்து அதற்கேற்றவாறு நடந்து சுவாசத்தைக் குறைத்து நலம் பெறுவோமாக.

## உண்மை நண்பன் யார்?

உண்மை, அன்புடன் பேசுதல், வணக்கம், இந்த மூன்று குணங்களும் உள்ளவன் மற்றவர் களைத் தன்வசப்படுத்துவான்.

இம்மை, மறுமைப் பயனைப் பெறும் வழியில் தான் நாம் இயங்க வேண்டும்.
தீய காரியம் செய்பவன் குருடன்.
நல்லதைக் கேளாதவன் செவிடன்.
சந்தர்ப்பம் கிடைத்தபோதும் இனிமையான வார்த்தை களைப் பேசாதவன் ஊமை.

ஒருவரை நாம் எதுவும் கேட்காமல் இருந் தால் அது ஒரு சிறந்த தானமாகும். ஒருவர் நம்மைக் கேட்காமல் அவருக்குக் கொடுக்கும் பொருளே தானம் எனப்படும்.
நம்மை பாபம் செய்யாமல் தடுப்பவன் நண்பனுமாவான்
ஒழுக்கமே உண்மையான அலங்காரம்.
அழகான சொல் ''சத்தியம்''

# நவக்கிரக வழிபாடு

(அருணேசர்)

நவக்கிரக வழிபாடு ஏன் முக்கியத்துவமானது என்பதன் காரணம் என்ன என்பதை முதலில் அறிந்து கொள்வது அவசியம். ஏனெனில், நவக் கிரகங்கள் மனிதருக்கு பலவித நன்மைகளையும் தீமைகளையும் செய்கின்றன.

இறைவன் மக்களையும் மற்றும் உயிர்வர்க் கங்களையும் படைத்து அதன் வாழ்க்கையானது இன்னபடி நடக்க வேண்டும் என்று விதி முறையை அமைத்துள்ளார். அம்மக்களுக்கு முற் பிறப்பில் அவரவர் தீமைகளை விதிப்படி அளிப் பதற்காக அந்த நவக்கிரகங்களை நியமித்துள்ளார்.

அதன்படி மனித வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கும் காலக் கூறுகளுக்கும் நவக்கிர கங்களே காரணமாயமைந்துள்ளன. நவநாயகர் களாகிய இந்த கிரகங்களின் பார்வைக்கு நானி லத்தில் யாரும் தப்ப முடியாது, ஒவ்வொருவரும் தாம்செய்த அல்லது செய்கின்ற புண்ணிய பாபச் செயல்களின் பலனை அனுபவித்தே தீரவேண்டும்.

வான வெளியில் மிதக்கும் சூரியன் முதலான அந்த ஒன்பது கிரகங்களும், நட்சத்திரங்களும் யாவும் வானத்திலுள்ள மின்சார இயக்கத்தின் மூலம் ஒன்றோடொன்று தொடர்புடையனவாக அமைக்கப்பட்டுள்ளன.

அச்சக்தி மனிதனைச் சூழ்ந்தும் மண்ணிலும் நீரிலும் மற்றும் பிற பொருள்களிலும் ஒளிக்கதி ராகப் பாய்ந்தவண்ணம் தன் ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றது. அவ்விதம் பாயும் ஒளிக் கதிர்தான் மனிதருக்குப் பலவித சுகதுக்கங்கள் நன்மை தீமைகள் ஆகியவற்றை ஏற்படுத்துகின் றது.

இதனை இக்கால பருவநிலை ஆராய்ச்சியாள ரும் அறிஞர்களும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

சூரியசந்திரர்களுடைய கலைகள் ஒன்றுகூடும் காலங்களாகிய அமாவாசை, பௌர்ணமி, கிர கணம் ஆகிய காலங்களில் இப்பூமியின் பரமா ணுவில் விசேஷ மாறுதல் ஏற்படுவதும், அசனுல் மனிதர் (முக்கியமாக நோயாளிகள்) பாதிக்கப் படுவதும் யாவரும் அறிந்ததே. அதுபோலவே அக்காலங்களில் கடல் பொங்குவதையும் காண லாம். இதேபோலத்தான் அந்தக் கிரகங்களின் நிலைக்குத் தக்கபடி நமது உடலிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

சோதிடத்தில் 6-வது இடம் ரோகஸ்தானம் என்று கூறப்படுகின்றது. 8-ம் இடமும் 10-ம் இட மும் அப்படியே இருக்கும்போது, அதன்படியே ஒவ்வொரு கிரகமும் வெவவேறு பல நோய்களை ஏற்படுத்துவதைக் கண்டறிந்தே இதனைக் கூறி யுள்ளனர்.

சான்றாக சனியின் சக்தியைக் கூறலாம். சனி யின் தீமை மிகக் கொடூரமானது. அதற்குப் பரி காரமாக சில சாந்தி வழிபாட்டு முறைகளை நம முன்னோர் நியமித்துள்ளனர். அம்முறைப்படி சனிக்குப் பிடித்தமான எள்ளில் ஹோமங்கள் செய்தால் அத்தீங்குகள் நீங்கி நன்மை ஏற்படும் என்பது அம்முன்னோர் அநுபவம்.

எள்ளில் சக்திவாய்ந்த மூலகங்கள் உள்ளன: அவை தீயில் எரியும்போது பிராண வாயுவுடன் கலந்து 'ஆக்ஸைடு' என்னும் பஸ்மத்தை (சாம் பல் புகையை) விடுகின்றன. அத்துடன், அப் போது செய்யும் மந்திர உச்சாடணத்தால அதிர் வுகள் ஏற்பட்டு சனியின் கெடுதல்களால் ஏற் பட்ட அதிர்வுகளைத் தாக்கி அழிக்கின்றன. ஒவ் வொரு சாந்தி ஹோமமும் ரசாயன சக்தி மூலம் தியசக்திகளை அழிக்கும் வன்மை கொண்டது

இவ்வாறே சூரியனுக்கும் மனித உடலுக்கும் உள்ள தொடர்பு நன்மை தீமையான மாற்றங் களை உண்டாக்குகின்றனவாதலால், சூரியனையும் வழிபடவேண்டும். சூரிய உபாசனையாகிய சந் தியாவந்தனம், காயத்திரி ஜெபம் ஆகியவற்றை நம்முன்னோர் கைக்கொண்டு வந்தார்கள். சூரிய னின் செயலான (Dynamatic) பிராண சக்தியை தான் காயத்திரி எனப்படுவது.

சூரியகிரகம் ஆத்மா, பிராணன், எலும்பு முதலியவற்றின் உற்பத்திக்கு அதிபதி. மண்ணு லகுக்கு சூரிய ஒளியிலிருந்துதான் பிராண சக்தி யாகிய உயிர்ச்சக்தி வருகிறது.

''பிராண! த்வம் ஜோதிஷாம் பதி'' (பிரா ணனே நீதான் ஜோதிகளின் தலைவனை சூரிய

ளுக விளங்குகின்றுய்) என்று உபநிடதம் கூறுகிறது. இப்பிராண சக்தி நம் உடலில் போதுமான அளவு இல்லாதபோதுதான் நோய், முதுமை, இறப்பு ஆகியன உண்டாகின்றன. சில மணிநேரம் சூரியசக்தி மண்ணுலகில் பரவவில்லையானுல் இங்கு ஓர் உயிரும் இருக்காது.

இதே போலத்தான் சந்திரனுக்கும் மனித உடலுக்கும் தொடர்பு உளது. சந்திரன் மாதந்தோறும் குறைவதனுலும் வளர்வதனுலும் மக்களுடம்பில் மாறுதல்கள் ஏற்படுகின்றன- பௌர்ணமி, அமாவாசை, ஏகாதசி முதலிய குறிப்பிட்ட நாட்களில் சந்திரனுடைய சக்தியினுல் உடம்பில் சூடும் குளிர்ச்சியும் மாறுபடுகின்றன. இதனுல் செமிக்கும் சக்தி மாறுபடுகிறது!

இதுபற்றியே நம்மவர்கள் மேற்படி நாட்களில் ஒருவேளை உணவுமாத்திரம் உண்டு விரதமிருக்கிறுர்கள். மேற்படி நாட்களிலே நோயாளிகளுக்கு நோய் அதிகமாவதையும், விஷப் பூச்சி கடித்தவர்களுக்கும், ஊரல் நோய் உள்ளவர்களுக்கும், உடம்பில் அரிப்பு அதிகமாவதையும், யானைக்கால் நோய் அதிகரிப்பதையும் காணலாம். மூளைக்கோளாறு (பைத்தியம்) ஏற்படுவதற்கும் சந்திரனுக்கும் தொடர்புண்டு.

இவ்வாறே மற்றக் கிரகங்களும் பல தீமைகளை விளைவிக்கின்றன. அதனுல் அவற்றுக்கும் பல வித சாந்தி வழிபாட்டு முறைகளைச் செய்தல் அவசியம். இவ்வாறு நவக்கிரகங்களை வணங்குவது இறைவனையே வழிபடுவதாகும்.

அவரவர் தமக்கு உள்ள ஆயுல், தொழில், பொன், பொருள், கல்வி, அழகு இறப்பு ஆகிய ஏழும் தவமுடைப் பிரமதேவன் தமது கைத்தொடங்கி, முன்னம் சிவனுடைய அருளினுலே கர்ப்பத்தில் நிச்சயித்திருப்பான் என்று சோதிட வல்லுனர்கள் அறிந்து கூறியுள்ளனர்.

அந்த பலன்களின் இன்ப துன்பங்களை அநுபவிப்பதற்கு தநு கரண புவன போகங்களை ஈந்தும் நமக்கு அருள் தருகிறுர் அச்சிவபெருமான். அவர் விதியைப் படைத்ததோடு மதியையும் படைத்துள்ளதால், அதனைக் கொண்டு மதியால் விதியை வெல்லும் சாந்தி முறைகளைக் கைக் கொள்வதே விதியை வெல்லும் வழி.

நாம் எவ்வளவு வீரப்பேசி முயற்சியினுல் அல்லது முன்யோசனையினுல் விதியை வென்றுவிடலாம் என்று நம்பிக்கை கொண்டிருந்தாலும், அம் முயற்சிக்கும் வகைபேதமும் வல்லமையும் பிறவிக் குணமாக அமைந்துள்ளது என்று சோதிட சாஸ்திரமும் சாமுத்திரிகா இலட்சணமும் சுட்டிக்காட்டுகின்றன.

ஆனுல் அதற்காக, ''நல்வினை இருந்தால் நல்லவை வரட்டும், தீவினை இருந்தால் தீயவை வரட்டும்.'' என்று அவற்றை எதிர்பார்த்துக் கொண்டு இருந்துவிடக் கூடாது. பேசாமல் இன்னர்க்கு இன்னபடி என்று எழுதிவிட்ட சிவன், தன்னைத் தஞ்சமடைந்துவிட வேண்டியது தான்.

''சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்கு
அபாய மொருநாளு மில்லை — உபாயம்
இதுவே மதியாகும் அல்லாத வெல்லாம்
விதியே மதியாய் விடும்.,

எனவே இறைவனுடைய நாமத்தை மதியினுல் தியானிப்பதைத் தவிர வேறு வழி இல்லை. அவரை எந்நேரமும் சிந்தித்து, நம் ஊழ்வினைகளைப் போக்கி நம்மைக் காப்பாற்றும்படி பரிவுடன் வேண்டிக் கொண்டால் அப்போது அவர் நமக்கு நம் விதியாக வரும் துன்பங்கள் தோன்றுதபடி தாங்கிக் கொள்வார்.

ஆனுல் இதனுல் விதியின் கடுமையை — வேகத்தை தணித்துக் கொள்ளலாமேயன்றி, முற்றிலும் விலக்கிக் கொள்ள முடியாது என்பதையும் மனதிற் கொள்ள வேண்டும்.

திருஞான சம்பந்தர் கூறுகிறுர்,- ''முற்பிறப்பில் செய்த தீவினைகளின் பயனுக, இப்பிறப்பில் இன்ப துன்பம் வந்ததென்று சொல்லுகின்ற வினைச் சட்ட உண்மையை மட்டும் நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள்; முற்பிறப்பிலே செய்த அந்தத் தீவினைகளின் பயன் இப்பொழுது அணுகாமல் தடுத்துக் கொள்ள நீங்கள் செய்யும் செயல் இன்னதென்று ஆராயாது இருந்தால் உங்களுக்கு ஊனமல்லவா''

''அடியார்களாகிய நாம் எம்பிரானது திருவடிகளை மனமாற வணங்குவோம். அவ்வாறு வணங்கினுல், நாம் முன் செய்த தீவினைகளின் பயனுக துன்பங்கள் வந்து எம்மை அணுகுவதற்கு வலிமையற்றதாகும். தேவர்களுக்கு வந்த இடரை நீக்க எம்பிரான் விஷத்தை தாமே உண்டு கண்டம் (கழுத்து) நீல நிறமடைந்தார். அந்த நீல கண்டத்தைச் சிந்தித்து அந்த நாமத்தை உரைப்போம்''

இதே கருத்தைத் தான் தாயுமானுர்:- ''கன்மமானது கோடி முன்னே செய்தாலும் நின் கருணைப் பிரவாக வருளைத் தாகமாய்த் தேடினரை வாதிக்க வல்லதோ'' என்றுர்.

(22-ம் பக்கம் பார்க்க)

# அதிஷ்ட எண் ஞானம்

இ. மகாதேவா 140, செல்லர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

(முன் தொடர்ச்சி)

## எண் - 7 கேது

பிறப்பு எண்ணும் கூட்டு எண்களும் உள்ள வர்களுடைய பலன்கள்:

7—1 அரசாங்கம், கலைத்துறை, பிரயாணத் துறை ஏதாவதொன்றில் தொடர்பிருக்கும் மிகுந்த மனச்சாட்சி உள்ளவர்கள். இலக்கியம், நாவல்கள் பல தேசங்களைப்பற்றிய செய்திகள் படங்கள் என்பனவற்றில் அதிக நாட்டம் கொண்டு அறிய முற்படுவார்கள். பழமையைப் போற்றும் இவர்கள் புதுமையில் நாட்டம் இல்லாமல் இருக்க மாட்டார்கள். 1-ம் எண்ணில் பெயர் அமைந்தால் மிக வேகமாக முன்னேறிவிடுவர். திருமண வாழ்வு ஓரளவு போராட்டம் நிறைந்ததாகவிருக்கும். சுதந்திர மனப்போக்கும், இடைவிடாத முயற்சியும் நம்பிக்கையும் இவர்களை உன்னத நிலையடையச் செய்யும்.

7—2 சாதாரணத் தொழில்கள், எழுத்து கணக்குத் துறையில் நாட்டமிருக்கும். கலைத் தொடர்பிருக்கும். தெய்வபக்தி இருக்கும். மனச்சாட்சிக்குப் பயந்தவர்கள். அடிக்கடி மனம் காகிதவோடம் போன்று அங்குமிங்கும் அலைபாடும். எதையாவது செய்யவேண்டுமாயின் மிகுந்த போராட்டமாக இருக்கும். இவர்களுக்கு யாராவது தக்க ஆலோசனை கூறுவிடத்து வாழ்வில் உயர்வோ வெற்றியோ அடையமுடியாத நிலை ஏற்படும். தமது பெயரை 1, 2-ம் எண்களில் அமைத்துக் கொள்ளலாம். சிறுநீர்வியாதி, ஆஸ்மா சளி, விறைப்பு போன்ற ரோகங்கள் வர இடமுண்டு. சீதோஸ்ண நிலைகளால் பாதிக்கப்படுவார்கள். அடிக்கடி எதையாவது மனதிற்போட்டு சலனப்படுவார்கள். குடும்பத்திலும் அயலவருடனும் ஒற்றுமையாக இருக்கப்பழகிக் கொள்ளல் வேண்டும்.

7—3 தொழில்நுட்பம், மின்சாரம் சம்பந்தமான கலப்புத் தொழில், வியாபாரம், பொருட்கள் உற்பத்தி என்பனவற்றால் அதிக பணம் சம்பாதிக்கலாம். அரசாங்கத்தில் இருப்பவர்கள் பலத்த போராட்டத்தின் பின்பே உயர் பதவிகள் அடைவர்கள். அறிவு ஆராய்ச்சித்துறைகளிலதிக புகழடைவார்கள். வேதாந்தம்பற்றி அடிக்கடி பேசுவார்கள்.

7—4 பத்திரிகைத் தொடர்பு, எழுத்து, வியாபாரம், சட்டத்துறைகளில் சிறப்படையும். ''பார்த்தால் பசு பாய்ந்தால் புலி'' போன்ற இயல்பினர். இவர்களுடன் பழகியவர்களுக்கே இவர்களது தன்மை புரியும். நீதி தர்மத்துக்காக போராட்டம் சர்வசாதாரணமாகும். நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள் எப்பொறுப்பையும் சிரத்தையுடன் செய்து முடிப்பார்கள்.

7—5 இரசாயனம், புடவைத்தொழில், வியாபாரம், பிரயாணத்துறை, தங்கத்தொழில் போன்றவற்றில் மிகச்சிறப்பான நிலை அடைவர். வெளிநாட்டு கமிஷன்தொழில், கடல் சம்பந்தப்பட்ட தொழில்களில் சிறப்படையலாம். இவர்கள் பலர் அரசாங்கத்துறைகளில் பல கலப்பான பதவிகளில் மாறி மாறி இருக்கின்றார்கள். அடிக்கடி தொழில்களை மாற்றுவதால் நிலையில்லாத மாறுதல் அடைகிறார்கள். இதனால் வாழ்வில் மேல் நிலை அடையமுடியாமல் இருக்கின்றார். இவர்கள் ஒரு துறையில் தொடர்ந்திருக்கப் பழகிக் கொள்ளல் வேண்டும்.

7—6 தொழில்நுட்பம், இயந்திர, மின்சாரத் தொடர்பு பல நிறங்கள் கலந்த இரசாயனக் கலவைகளுடன் சம்பந்தப்பட்டவை என்பவற்றால் பணம் சம்பாதிப்பர். செய்தி அறிவிப்பாளர்களாகவும் விளங்குகிறார்கள். இவர்கள் 6ம் எண்ணை வலுப்படுத்திக் கொண்டால் தொழில் நிலையில் உறுதியான நிலை ஏற்படும்.

7—7 மிகுந்த பிரயாசை உள்ளவர்கள். பிடிவாதப்போக்கு, தெய்வபக்தி, இவர்கள் வியாபாரம் மதம், வைத்தியத்துறையில் ஈடுபட்டால் பிரகாசிக்க முடியும். எந்தப்பொறுப்பையும் கொடுத்து, இவர்களைச் சுதந்திரப் போக்குடன் விடவேண்டும். மிகுந்தசுறுசுறுப்புடன் எதையும் செய்து முடிப்பார்கள். வாழ்க்கையில் ஏற்படும் விதிவசமான சம்பவங்கள் இவர்களை தெய்வபக்தியில் ஈடுபடச் செய்துவிடும். புத்தகப்படிப்பைவிட வாழ்க்கையில் ஏற்படும் இன்ப, துன்பச் சம்பவங்களால் ஏற்படும் அனுபவமே இவர்களை உறுதியான நிலைக்குக் கொண்டு செல்லும். எதையும் எதிர்த்து செயல் புரிவதால் அதிக அறிவு ஆற்றல் என்பன இவர்களுக்குக்கிடைக்கும்.

7—8 இவர்கள் சாதாரண நிலையிலிருந்து படிப்படியாக உயர்ந்த நிலையை அடைவார்கள். அரசாங்கத்தில், அதிகார பீடங்களில் படைப்பிரிவுகளில் தொடர்பிருக்கும். ஊரில் கொலை, களவு செய்யும் ஐ. ஆர். சி. க்களாகவும் இவர்கள் பழக்க தோஷங்களினால் ஆக்கப்படுகின்றார்கள்.

7—9 இவர்கள் கலப்பான தொழில், தரகுத் தொழில், ஒப்பந்தத்தொழில், இரும்பு, எண்ணெ வகை, இன்சினியறிங் (தொழில்நுட்பமாக) போன்ற தொழில்களிலும் சமய, மந்திரத் தொடர்புடையவர்களாகவும் இருப்பார்கள். திடீர் உணர்ச்சி வசப்பட்டு செய்யும் செயல்களால் அதிகம் பாதிக்கப்படுவார்கள். இவர்கள் திசை புத்தியை அனுசரித்து தமது எண்களை பலப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

அதிஷ்ட திகதிகள்:- 1,10,19/2,11,20,7,16,25 27 அதிஷ்டதினங்களாகும். மேலும் 8, 9, 17, 18 26ம் திகதிகளில் விதிவசப்பட்ட சம்பவங்கள் நடக்க இடமுண்டு. கறுப்பு, சிவப்பு நிறங்களைப் பாவிப்பதால் தோல் தரித்திரம், விபத்துக்கள் ஏற்பட இடமுண்டு.

அதிஷ்ட வாரம்:- திங்கள், ஞாயிறு வெள்ளிக்கிழமைகளாகும்.

அதிஷ்ட நிறங்கள்:- இளம்மஞ்சள், வெள்ளை, பச்சை, பழுப்பு நிறங்கள் உடுப்புக்களையும் பொருட்களையும் பாவிப்பதால் வசீகரசக்தி பெருகுவதுடன் நோய் வராது பாதுகாக்கும் தன்மை ஏற்படும்.

அதிஷ்ட இரத்தினம்:- வைடூரியம், முத்து, சந்திரக்கல் (Moon Stone) பாவிக்கவும். இவற்றை அணிவதால் உடல் ஆரோக்கியம் ஏற்படும். பணம் பெருகும். ஆயுள்நீடிக்கும், திருமணவாழ்வு சந்தோஷமாக இருக்கும். முகத்தில் கவர்ச்சி ஏற்படும். மேற்கூறிய இரத்தினக்கற்களை அணிபவர்கள் சுத்தமாகவும் மையவீட்டுக்கு, வைத்தியசாலைக்கு போகும் சந்தர்ப்பங்களில் அணியாமல் இருக்கவும். இல்லாவிடில் தீமைகள் ஏற்படும்.

வைடூரியம் - பச்சிலைச்சாற்றில் இதைப்போட்டால் வெள்ளைநிறமாகும். நுரைகலந்த பாலில் நல்ல முத்து மிதக்கும்.

## 7—ம் எண்ணில் பிறந்த சில பெரியார்களின் பெயர்களும், திகதிகளும்

| | |
|---|---|
| இராமன் | 7. 11. 1889 - 7 & 8 |
| சார்லிசாப்ளின் (உலகபுகழ்சிரிப்புநடிகர்) | 16, 4. 1889 - 7 & 1 |
| இயேசு கிறிஸ்து | 25. 12. — 7 |
| ஜின்னு (பாகிஸ்தானை உருவாக்கியவர்) | 25. 12. 1876 - 7 &5 |
| முருகனம் முருக கிருபானந்த வாரியார் | 25. 8. 1906 - 7 &4 |

---

நவக்கிரக...... (20-ம் பக்கத் தொடர்)

சுந்தரரும்:- ''பாண்டாழ்வினை களைவத் தீர்க்கும் பரமா'' என்றார். அப்பரும் இதே கருத்தைத் தெரிவித்துள்ளார். வள்ளுவரும்:- இருள்சேர் இருவினையும் சேரா இறைவன் – பொருள் சேர் புகழ் புரிந்தார் மாட்டு'' என்ற குறளில், கடவுளின் மெய்ம்மை சேர்ந்த புகழை விரும்பிப் போற்றினர்க்கு நல்வினை தீவினை என்னும் இருவித வினைகளும் நெருங்கா எனக் கூறுவதுங் காண்க.

ஆகவே, ஆன்மாக்கள் செய்த நல்வினை தீவினைக் கேற்றபடி இறைவன் இன்ப துன்பங்களை வழங்குகிறான் என்பதை மனதிற் கொண்டு நாம் அறிந்தோ அறியாமலோ முற்பிறப்பில் செய்த தீவினைகளுக்காகப் பரிந்து, அவ்வினைகளால் இப்பிறப்பில் நமக்கு உண்டாகுந் துன்பங்களாகிய தண்டனைகளைக் குறைத்து, எம்மை மன்னித்து மேலும் தீவினை செய்யாமலிருக்க தூய மன உறுதியைத் தந்து காத்து ஆட்கொள்ளும்படி அவ்விறைவனையும் நவக்கிரகங்களையும் என்றென்றும் வணங்கிவர வேண்டும். நவக்கிரக வழிபாடு இதனால்தான் முக்கியத்துவமாகக் கொள்ளப்படுகிறது.

# ஆய்வுமன்றம்

மா. இ. சோதி கொழும்பு2.

கணித விஞ்ஞானத்துடன் சேர்ந்ததுறைகளில் படிப்பைத் தொடர்ந்தால் முன்னேற்றம் அடையலாம் என்பது கிரகங்களின் தீர்ப்பு.

தங்கராசா மதிவண்ணன்,
சந்தைவீதி வந்தாறுமூலை.

இலக்கினம் தனு மீனத்தில் சனி ராகு - சிங்கத்தில் சந்திரன் - செவ்வாய் கன்னியில் புதன் -குரு - கேது துலாத்தில் சூரியன் - விருச்சிகத்தில் சுக்கிரன் என உமது கிரகநிலை அமையும். நட்சத்திரம் பூரம் 4ம் பாதம் சென்ன காலம் சுக்கிரன் தசையில் இருப்பு வரு 0 - மீ 4 -நாள் 6.

ப.க. சிதம்பரப்பிள்ளை,
மரையடித்தகுளம்- ஓமந்தை.

உத்தியோக உயர்வு கிடைக்கும். வாகன மத்திமயோகமுண்டு. வீடுகட்டத் திருத்த பலனுண்டு.

மருத்தமுத்து பழனிச்சாமி -
வரதன்மில் காங்கேசன்துறை.

நீர் பிறந்த ஆண்டு மாதம் திகதி நேரம் பிறந்த இடம் முதலிய முழுவிபரங்களுடன் கணித சோதிடர் ஒருவருடன் தொடர்பு கொண்டு உமது கிரகநிலை முதலிய முழுவிபரங்களையும் விண்ணப்பப் படிவத்தில் பூர்த்திசெய்து அனுப்பினால்தானே உமது பிரச்சனைகளுக்கு ஆய்வுமன்றம் பதில் தர முடியும்.

நா. பஞ்சலிங்கம்: - சேனைக்குடியிருப்பு 2;

ஏழரைச்சனியின் கடைசிக் கோசாரம் நடந்து அத்துடன் குருவின் துர்க்கோசரமும் நிகழ்ந்தது. அதனாலும் உமக்கு நீர் குறிப்பிட்ட சம்பவங்கள் நடந்தன; இனிமேல் அப்படியான சம்பவங்கள் பெரும்பாலும் நிகழஇடமில்லை. கவலைப்பட வேண்டாம்.

த. சிவசம்பு:- 1வது யுனிற்- கல்மடு S.P. வவுனியா.

உமது பிறப்பு 1925-09-18 வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நிகழ்ந்திருந்தால் - லக்னம் கன்னி -இலக்கினத்தில் சூரியன் சந்திரன் - செவ்வாய் 2ல் சுக்கிரன் - சனி - 4ல் வியாழன் 5ல் கேது 11ல் ராகு 12ல் புதன் எனக்கிரகநிலை அமையும்.

K.சசிதரன் K.K.S ரோட் மல்லாகம்.

தெய்வநம்பிக்கையும் பக்தியும் இருக்குமாயின் "நாள் என்செய்யும் - வினை தான் என்செய்யும்"?- சனிதசையும் - ஏழரையும் சேர்ந்து நிகழ்கிறது. நோய் சுகமாக தெய்வத்தை வேண்டுக.

அ. பத்மலோஜினி:-
அம்மன் கோவிலடி, தொண்டமாறு.

நீர் 1961-08-19 அதிகாலை 12 18 (A M)யில் பிறந்திருந்தால் சரியான கணிப்பின்படி உமது சென்ன நட்சத்திரம் ரேவதி 1ம் பாதமாக இருக்கும். கிரகநிலையிலும் கடகத்தில் வெள்ளி சிங்கத்தில் சூரியன் - புதன் - இராகு கன்னியில் செவ்வாய் மகரத்தில் வியாழன் — சனி கும்பத்தில் கேது மீனத்தில் சந்திரன் என அமையவேண்டும்.

சிவஸ்ரீ. க குகதாஸக் குருக்கள்,
உயரப்புலம் -ஆனைக்கோட்டை.

குடும்பத்தில் கருத்துவேறுபாடுகளும் புத்திரர் வகையில் துன்பமும் ஏற்படவே செய்யும். இறைவன் கருணையை நம்பினால் எல்லாம் இனிதாகும்.

வே, த. நக்கீரன், கலையகம், சித்தங்கேணி.

நடப்பு புதன் தசையும் 1995-10-22ன் மேல் நிகழஇருக்கும் சுக்கிரன் தசையும் தொழில் முன்னேற்றத்துக்கு உரியகாலங்களாயினும் சகடயோக சாதகமாதலின் செல்வம் சேரலும், அழிதலும் தவிர்க்க முடியாதவை தானே!

மு. பகீரதன், கச்சாய் வடக்கு கொடிகாமம்.

வெளிநாட்டுப்பலன் கிடைக்கும். முயற்சி செய்க, ஆனால் சனிகோசாரபலம் குறைவதால் நம்பிக்கை மோசடிகளுக்குள்ளாகாதவாறு அவதானமும் தேவை,

ரவிச்சந்திரிக்கா நாகேந்திரம்,
பருத்தித்துறைவீதி, காங்கேசன்துறை.

உமது கல்வியைத் தொடருவதில் ஏற்படும் தடைகளைச் சமாளித்து முன்னேறினால் கல்வியால் பலன் பெறுவதில் சந்தேகமேன்?

பெருமாள் வாமதேவன்,
பாத்போட்எஸ்டேட், டிக்கோயா.

ஆங்கிலத்திகதி இரவு 12மணிமுதல் அடுத்த நாள் இரவு 12மணிவரையும் உள்ள 24ம்ணி நேரம் கொண்ட நாளாகக் கணிக்கப்படும். எனவே பின் இரவு 4 15 மணிநேரம் இரவு 12 மணிக்குப்பின் வருவதால் உமது பிறந்த திகதி 5. அதாவது 1959-08-05 அதிகாலை 4.15(A M) இதற்கு இலக்கினம் மிதுனம். 2ல் சூரியன், சந்திரன், 3ல் செவ்வாய் அமையும். நட்சத்திரம் ஆயிலியம் 2ம் பாதம்.

# குறுக்கெழுத்துப் போட்டி

## இல. 35

### முதலாம் பரிசு ரூ. 50/-

**போட்டி நிபந்தனைகள்**

1. கீழ்வரும் சதுரத்தைப் பூர்த்தி செய்து உங்கள் பெயர், முகவரியையும் எழுதி தபாலட்டையில் மட்டும் ஒட்டி அனுப்பவேண்டும்.
2. 1-6-1985க்குப்பின் கிடைக்கும் விடைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. சரியான விடையை அனுப்பி தேர்ந்தெடுக்கப்படும் முதலாவது அதிஷ்டசாலிக்கு ரூ. 50/- இரண்டாவது அதிஷ்டசாலிக்கு 6 மாத சோதிடமலரும், மூன்றாவது அதிஷ்டசாலிக்கு 3 மாதச் சோதிடமலரும் இனும்.
4. போட்டி ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது.

விடைகள் அனுப்பவேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல. 35
சோதிடமலர்

மட்டுவில் .... சாவகச்சேரி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கி 1 | 2 | 3 | மா 4 | 5 | 6 |
| 7 | ■ | த 9 | 10 | 11 | சி 12 |
| ஷ் 13 | 14 | 15 | 16 | ■ | 18 |
| 19 | ■ | 21 | பா 22 | 23 | ■ |
| 25 | 26 | ■ | 28 | மி 29 | 30 |
| து 31 | 32 | 33 | ம் 34 | ■ | 36 |

பெயர் ..........................................................

விலாசம் ......................................................

..........................................................

**இடமிருந்து வலம்:**

1 லக்னம் முதல் ஏழு ராசிகளில் இடைவிடாது கிரகங்களிருப்பின் ......... யோகம் ஏற்படும்.
9 திதியொன்று மறைந்துள்ளது.
13 குருவிற்கு ஸ்தான பலத்தைவிட இப்பெலம் வலிமையானது. குழம்பியுள்ளது.
21 நட்சத்திரமொன்றின் ¼ பாகத்தை இவ்வாறு சொல்வர். குழம்பிவிட்டது.
25 ...... பார்க்கின் கோடி தோஷம் நீங்கும் என்பர். வலமிடமாகியுள்ளது.
28 சுபகருமங்களுக்கு விலக்கப்படும் திதிகளில் ஒன்று குழம்பியுள்ளது.
31 இச்சொல் 'இரண்டு' என்று பொருள்படும்.

**மேலிருந்து கீழ்:**

1 முதுவேனிற் காலத்தை வடமொழியில் இவ்வாறு வழங்குவர்.
3 ஓரிடத்தின் செய்திகளை இன்னோரிடத்திற்கு அறிவிப்பது இது. குழம்பிவிட்டது.
4 நான்காம் பாவத்தின் பிரதான காரகம் மாதா ஆதலின் அப்பாவத்தை இவ்வாறு கூறுவர்.
5 இராமாயணத்தில் வலிமை மிக்கவனாகவுள்ள இவன் இராம பாணத்தினால் உயிர்துறந்தான். தலைகீழாகவுள்ளது.
6 இந்தியாவிலுள்ள மோட்சஸ்தலங்களுள் இதுவுமொன்று. குழம்பியுள்ளது.
23 அமிழ்தினுமினிய பாஷையொன்றின் இறுதி எழுத்து நீங்கிவிட்டது.
26 தலைகீழான இதனிடையே 'ர' சேர தானியமொன்று கிடைக்கும்.
30 இது இல்லாத ஊரின் அழகு பாழ் என்பர்.

**குறுக்கெழுத்துப்போட்டி இல. 34ன் விடைகள்**

இடமிருந்து வலம்:
1. சூரியோதயம் 9. அத்தம் 13. விருச்சிகம் 20. (பூ)சம் 23. கர 25. உதயம் 31. சங்கிரமம்

மேலிருந்து கீழ்:
1. சூலம் 3. அம்சயோகம் 4. சித்த(ம்) 5. விரயம் 6. கிருதயுகம் 14. உச்சம் 25. யம(ன்) 28. தர

பரிசு பெறுவோர்:

1-ம் பரிசு: வே. தெய்வநாயகம்
8-ம் வட்டாரம்
துறைநீலாவணை (கி. மா.)

2-ம் பரிசு: ஆ. சிதம்பரநாதன்
மிருசுவில் வடக்கு
மிருசுவில்.

3-ம் பரிசு: க. சுந்தரலிங்கம் (ஆசிரியர்)
மட்/மாங்காடு,
குருக்கள்மடம்.

# வாசகர் எண்ணம்

## திருக்கணிதமே சரி

குரோதன வருடப்பிறப்பு கணிப்பு கணித பஞ்சாங்கம் சரியா? வாக்கிய பஞ்சாங்கம் சரியா? என்ற சர்ச்சையும் எத்த நேரம் வருடம் பிறந்தது என்பதிலும் மக்கள் பெரும் பிரச்சனைக்குள்ளாகி விட்டார்கள். கணிதமே சரி. என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை. அனுபவரீதியாக பார்க்கும் போது அதாவது சனி மாற்றத்தை எடுத்துக் கொள்வோம்: நான் மூலநட்சத்திரம் தனுசு இராசி, கடந்த மார்கழியில் கணிதப்படி சனி மாற்றத்தால் எனக்கு 7½ சனி ஆரம்பம். (வேலூர் மாத சோதிடத்தில் வாசித்த நினைவு) அதாவது சனி ஆரம்பத்தில் 100 நாட்கள் (மூன்று மாதம் பத்து நாட்கள்) சிரசில் இருப்பார் என்றும் இக்காலம் கண்டம், துன்பம் என்றிருந்தது. இதன்படி என்தலையில் காயம் ஏற்பட்டு இலை போட வேண்டியதாயிற்று. கண்வருத்தம் வந்து 20 நாட்கள் துன்பப்பட்டேன். மற்றும் பொருளாதார கஷ்டம். இதன்பின் 400 நாட்களுக்கு வலம் என்றும் (வருடம்1 மாதம்1 நாள் 10) சுபபலன் என்றும் இருந்தது. இதன்படி தற்பொழுது சுகமடைந்ததுடன் ஓர் அளவு நல்லநிலையில் உள்ளேன். ஆகவே கணிதம் தான் சரியான பஞ்சாங்கம் என்பது எனது தீர்க்கமான முடிவு: கணிதம் உலகில் வெளியாகும் பல பஞ்சாங்கங்களை ஒத்திருப்பதும் உலக நாட்டு வானிலை கிழகங்கள் கூற்று கணிதத்தில் சரியாக உள்ளதும் ஒருகாரணம். மற்றும் ஐயா, குரோதன வருட சித்திரை சோதிடமலரில், தம்பசிட்டி திருமதி த. நிர்மலா அவர்கள் எண் சோதிடமும் அதன் மாறுபாடுகளும் என்ற கட்டுரை என்னை வெகுவாக கவர்ந்தது மட்டுமல்லாமல் என் அபிப்பிராயமும் அதுவே. மற்றும் நல்லூர் திரு. வே. சின்னத்துரை அவர்கள் தந்த உதாரண ஜாதகங்களில் (காலசர்ப்ப யோகம்) மகாத்மாகாந்தியடிகளின் ஜாதகத்தில் 7ல் வியாழன் என்றும் திரு. வி. எஸ். கந்தசாமி அவர்களின் (குருவின் திருவருள்) கட்டுரையில் காந்தியடிகளின் கிரக நிலை எட்டில் வியாழன் என்றும் எழுதியுள்ளார். இதில் எது சரி? வித்தியாசம் வரக் காரணம் என்ன? தொடர்ந்து சோதிடமலர் வாசிக்கும் என் போன்றோருக்கு இப்படியான சிறுதவறுகள் ஏற்படும் போது மனம் வேதனையடைகிறது. நன்றி.

நாவற்குழி. மா. தங்கவேல்

## சனி விருச்சிகத்தில்தான்

தங்கள் மாதசோதிட வாசகர்களில் நானும் ஒருவன். தங்கள் சித்திரை ஆண்டுமலரின் 23-ம் பக்கத்தில் ''வாக்கிய சனி'' என்ற தலைப்பில் சனி துலாம் இராசியில் இல்லை என்பதை ஆதாரத்துடன் நிரூபித்திருந்தீர்கள். தங்கள் கருத்தை இன்னும் வலுப்படுத்தும் ஓர் ஆங்கிலப் புத்தகத்தை வாசிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. அப்புத்தகம் வான சாஸ்திரம் சம்பந்தமானது. ''STAR AND PLANET SPOTTING'' —A Field Guide to the Night Sky என்பதே அப்புத்தகம். அதன் ஆசிரியர் PETER LANCASTER BROWN என்பவர். அந்தப் புத்தகத்தில் கடைசிப் பகுதியில் 1974 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 1985 ஜனவரி 4-ந் திகதி வரை பிரதான கிரகங்களின் கோசார நிலை அட்டவணைப்படுத்தப் பட்டுள்ளது. இதைத் தங்கள் கவனத்துக்காகக் கீழே தருகின்றேன். வாசகர் கவனத்துக்கும் தெரியப்படுத்தவும்.

கிரக கோசார நிலை 1985 ஜனவரி 4

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | 284 பா. | புதன் | 261 பா. |
| சுக்கிரன் | 330 பா. | செவ்வாய் | 338 பா. |
| குரு | 292 பா. | சனி | 235 பா. |

நயினாதீவு. சி. பரராசசிங்கம்

## நிரூபிக்கப்பட்டுவிட்டது!

சித்திரைச் சோதிடமலரில் சனியிருக்கும் ராசி வாக்கியப்படி துலாமா? திருக்கணிதப்படி விருச்சிகமா? என்று 5-5-85 இல் நிகழ்ந்த சந்திர-சனி சமாகமமூலம் நேரிற் பார்த்தறியும்படி வெளியிட்டிருந்தீர்கள்.

அன்று நான் எட்டு மணி தொடக்கம் அவதானித்தேன். அன்று பூரணைக்கு அடுத்த தினமாக இருந்தமையாற்போலும் சனிக்கிரகம் வழமைபோல் பிரகாசமாய்த் தெரியாது விட்டாலும் பார்க்கக்கூடியதாய் இருந்தது.

திருக்கணிதப்படி சனி விருச்சிகத்தில்தான் என்பது நன்றாக நிரூபிக்கப்பட்டு விட்டது. என்னுடன் வேறு சிலரும் பார்த்தார்கள்.

சென்ற மார்கழியிலிருந்து சனி விருச்சிகத்திலிருந்த போதும் பத்திரிகைகளில் வாரபலன்கள் எழுதும் ஒருசில சோதிடர்கள் சனி துலாத்தில் இருப்பதாக வெளியிடுகின்றார்களே! இவர்கள் எத்தனை சாதகங்களை இப்படிப் பிழையாகக் கணித்தார்களோ!

தாங்கள் இதுபோன்ற சந்தர்ப்பங்களை வெளியிடுவது பலருக்கும் மிகவும் நன்மை பயக்கும்.

ஊர்காவற்றுறை. க. இளங்கோவன்

Registered as a News Paper at the G. P. O., Sri Lanka.




அன்புடையீர்!

சென்ற காலத்தில் தாங்கள் மில்க்வைற் தயாரிப்புகளுக்குத் தந்த பழுதிலா ஆதரவை இனிவரும் எதிர் காலத்திலும் குறைவறத் தந்துபகரிப் பீர்கள் எனத் தாழ்மையுடன் வேண்டு கின்றோம்.

" உள்நாட்டு மூலப்பொருள்களை உற் பத்திக்கு எடுப்போம்! உள்ளூர் உற் பத்திகளுக்கு ஆதரவு கொடுப்போம்"

மில்க்வைற் நீலசோப் மேலுறைகள் 500 அனுப்பி உள்ளூர் கைத்தறியில் தயாரிக்கப் பட்ட "அழகிய துவாய் ஒன்றைப்" பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்!

## மில்க்வைற் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23233

## சந்தா நேயர்களுக்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்,

தங்கள் கைகளில் கிடைக்கும் இச் 'சோதிடமலர்' என்றும் வாடாமலராக உங்கள் இல்லங்களில் நறுமணம் வீசி சகலருக்கும் வழிகாட்டியாக விளங்க வேண்டுமென்பது எமது அவா. தாங்கள் ஒவ்வொருவரும் புதுப்புது அங்கத்தவர்களை அறிமுகம் செய்து வைத்தால் மலரின் வளர்ச்சிக்கு மகத்தான தொண்டு புரிந்தவர்களாவீர்கள்.

| | | | |
|---|---|---|---|
| சந்தா விபரம்: | இலங்கைக்கு மாத்திரம் | வருட சந்தா | ரூ 40-80 |
| | வெளிநாட்டுக்கு (கப்பல்வழி) | வருட சந்தா | ,, 78-00 |
| | மலேசியா (விமான வழி) | வருட சந்தா | ,, 150-00 |
| | இங்கிலாந்து (விமானவழி) | வருட சந்தா | ,, 175-00 |

தனிப்பிரதி வேண்டுவோர் ரூபா 3-40 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

கடிதம், காசோலை முதலியன அனுப்பவேண்டிய முகவரி:

உரிமையாளர் "திருக்கணித நிலையம்" மட்டுவில் வடக்கு — சாவகச்சேரி.

Edited by K. Sathasiva Sarma; Printed and Published by S. Sethambaranaatha Kurukkal Thirukkanitha Nilayam, Madduvil, Chavakachcheri, Sri Lanka. Phone: 280